T-UN-426

# தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

மலர் 8

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2021

துணர் : 64 பிரமோதூத — கார்த்திகை மலர் : 8

நவம்பர் — டிசம்பர் — 1990

உள்ளுறை பக்கம்

1. தமிழ்த் திறனாய்வும் கலைச் சொல்லாக்கமும் .... 338
டாக்டர் க. பஞ்சாங்கம்

2. வாழ்க்கையில் முன்னேறுவதுஎப்படி ? ... 345
மதிப்புரை
குறளன்பன், ஆ. வே. இராமசாமி

3. காப்புக் கட்டுதலில் இரு மூலப்படிவ மாதிரிகள் ... 346
க, முத்தையா

4. கவிஞர் கண்ணதாசனின் 'புஷ்பா மாலிகாவில் நம்பிக்கை மலர்கள் .... 352
புவனா, (I பி.காம்)

5. முதல் தமிழ் நாவல்களில் மரபும் எதிர்ப்புணர்வும் ... 356
டாக்டர். கி. இராசா

6. இந்தியச் சிந்தனையாளர்களும் திருவள்ளுவரும் .... 364
ஆ. பாண்டுரங்கன்

7. குறுநாவல் — சில விளக்கங்கள் .... 369
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
டாக்டர் இரா. சண்முகவேலன்

8. திருவிடைமருதூர்க் கலம்பகம் ஓர் ஆய்வு
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
இரா. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., எம்ஃபில்

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பா

# தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ்.டி.காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
முன்னாள் செயலாளர், தமிழ்வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை,
சென்னை.

,, சிலம்பொலி சு, செல்லப்பன், எம்.ஏ., பி.டி.,பி.எல்.,பிஎச்.டி
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.

,, முனைவர்சி.பாலசுப்பிரமணியன், எம்.ஏ. எம்.லிட், பிஎச்.டி
துணை வேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி. எச்டி.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மு. கோவிந்தராஜன்
பேராசிரியர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மா. இராமலிங்கம், எம். ஏ., பி எச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர். கோ.முத்துப்பிள்ளை, பி ஏ.,
முன்னாள் அரசு துணைச் செயலாளர் சென்னை.

,, முனைவர் ஈரோடு தமிழன்பன், எம். ஏ., பி எச்.டி.,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி,சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர். செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர்,கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை.

,, புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம். ஃபில்
துணைமுதல்வர். த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., பி. எட்.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவர மேனிலைப்பள்ளி

,, முனைவர் பா. மதிவாணன், எம்.ஏ., எம். ஃபில்., பிஎச்.டி.
தமிழ் விரிவுரையாளர், த. உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

# தமிழ்த் திறனாய்வும் கலைச் சொல்லாக்கமும்

டாக்டர். க. பஞ்சாங்கம்,
அண்ணா கலைக் கல்லூரி,
காரைக்கால் - 604 602.

பொதுவாகவே, திறனாய்வுத் துறைக்கென்றே பல தனிப் பட்ட சிக்கல்கள் உள. அதுவும் தமிழ்த்திறனாய்வு உலகத்தை மேலோட்டமாகப் பார்க்கின்ற ஒருவர் கூட, இந்தச் சிக்கல்கள் எந்த அளவிற்கு வளர்ச்சியைத் தடுக்கும் தடைகளாய்ப் பெருகிக் கிடக்கின்றன என்பதை எளிதில் புரிந்துகொள்ளலாம். அத் தடைகளுள் குறிப்பிட்டுக் கூறவேண்டிய ஒன்று, இத் திறனாய்வு உலகில் பயிலப்படும் கலைச் சொல்லாக்கம் பற்றியதாகும்.

தமிழில் இன்று கிடைக்கின்ற முதல் நூலான தொல்காப்பி யத்திலேயே வேற்று மொழியிலிருந்து சொற்களை எவ்வாறு ஏற்க வேண்டும் என்பது பற்றியும், மொழிபெயர்ப்புப் பற்றியும் பேசப்படுகிறது. அத்தகைய வேற்றுமொழிச் சூழல் மேலும் வளர்ந்து நன்னூலார் காலத்தில் 'வடமொழியாக்கம்' என்று ஓர் இயலையே உருவாக்க வேண்டிய நெருக்கடி நிலை ஏற் பட்டதையும் அறிகிறோம். அதே நெறியில் கம்பன் என்ற மானுடன் வடமொழிப் பெயர்களையும் சொற்களையும் மிக அழகாகத் தமிழ்ப்படுத்தி வெற்றிகண்ட மரபையும் பார்க்கி றோம்; அப்படி அப்படியே வேற்றுமொழிச் சொற்ளைக் கலந்து எழுந்துகின்ற நெறிமுறை தமிழ் உலகில் நிலைக்காது என்ற படிப்பினையும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு வேற்றுமொழி களோடு நீண்டகாலத் தொடர்பும் படிப்பினை அறிவும் இருந்தும் அரசியல் மேலாண்மையினால் ஏற்பட்ட ஆங்கில மொழியின் செல்வாக்கை நாம் எவ்வாறு எதிர்கொண்டோம்,? எதிர்கொண்டிருக்கிறோம்? என்பதை எண்ணிப் பார்த்தால் வேதனைதான் மிஞ்சுகிறது. படிப்பினகளைப் பாடமாக ஏற்காத எந்த இனத்திற்கும், எந்தத் தனிமனிதனுக்கும் கூட வேதனைதான் மிஞ்சும்! இதுதான் விதி!

நாட்டின் விடுதலை இயக்கம் வளர்ந்த சூழலில் 1915- வாக்கிலேயே சிவா, பாரதியார் போன்ற தமிழ்ப்பற்று உடைய வர்களாலும், மறைமலையடிகளுடன் சேர்ந்து தனித்தமிழ் இயக்கத்தைக்கட்டி வளர்த்தவர்களாலும், "கலைச்சொல்

லாக்கம்" பற்றிய ஆழமான சிந்தனைகள் முன் வைக்கப் பட்டுள்ளன. சிவாவின் 'ஞானபாநு' 1915 நவம்பர் இதழ் கீழ்க்கண்டவாறு எழுதுகிறது

> "தமிழ்ப் பண்டிதர்களே! தமிழ் மகா ஜனங்களே! ஜாக்கிரதை! உங்களுடைய பாஷையைக் காப்பாற்றுங்கள்! ஒரு ஜன சமூகத்திற்கு உயிர் அதன் பாஷைதான். தமிழ்ப் பாஷை அழிந்து விட்டால், தமிழர்களின் சிறப்பும் சீரும் அழிந்துவிடும்! தமிழ்ப் பாஷையில் தேவையான பதங்கள் இல்லையென்று வாய் கூசாமல் கூறுகின்ற பாரத புத்திரர்களுக்கு அப்பதங்களை ஆராய்ந்து கண்டுபிடித்துக் கூறுங்கள். சரியான பதங்கள் இல்லையேல் தமிழ் வாணியின் கிருபை கொண்டு இன்னும் அநேகக் காரணப் பெயர்களை யாக்கிக் கொள்ளுங்கள். உங்கள் நா தமிழே பேசுக; நீங்கள் கையிலேந்துப் இறகு தமிழே எழுதுக; உங்களுடைய ஹிருதயம் தமிழையே நாடுக!"

பாரதியாரும் தமிழ்ப்படுத்துவது பற்றிப் பலவாறு தெளிவாக எழுதியுள்ளார் மொழிபெயர்ப்பவர்களுக்கு எளிதாக இருக்கும் பொருட்டுப் பண்டிதர்கள் கலைச்சொற்களை முதலில் உருவாக்கித் தர வேண்டும் என்றும் ஸ்லேட், பென்சில் போன்ற ஆங்கிலம் சொற்களை அப்படியே எழுதக்கூடாது, என்றும் பலகை, குச்சி என்றே எழுத வேண்டும் என்றும் எழுதிச் செல்கிறார் (பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பிரசுரம், (பக் 268 269 320)

தமிழ்த் திறனாய்வுத்துறையைப் பொறுத்தவரை இதையெல்லாம கணக்கில் எடுத்தாதாகவே தெரியவில்லை. இலக்கியம், திறனாய்வு, ஆகிய துறைகள் முழுக்க முழுக்க 'கருத்து நிலையில்' இயங்குபவை. எனவே இங்கே பயிலப் படும் சொற்கள் இயல்பாகவே சிக்கல் வாய்ந்தவை; பரிணாமம் மிக்கவை. தம்மை மீறிய பொருளை எப்போதும் சுமக்கத் துடிப்பவை; மேலும் திறனாய்வுத்துறையில் பயிலப்படும் சொற்கள், பல்வேறுபட்ட துறைகளின் இணைவினால் பெறப் படுபவை. எனவே அவைகளை மற்றொரு மொழியில் சொல் -லாக்கம் செய்வதும், மூலமொழிப் பொருளை எல்லாம் அப்படியே ஆக்கிக் கலைச் சொல்லில் ஏற்றுவதும் எளிதானது அல்ல; தொடர்ச்சியான ஒரு செயற்பாடாகும்!

இந்நூற்றாண்டில் தமிழ்த் திறனாய்வின் தொடக்ககால அறிஞர்களாகக் கருதப்படும் க. நா. சுப்ரமண்யம், சி. சு. செல்லப்பா, ரகுநாதன் முதலியோர் இந்தச் சொல்லாக்கம் பற்றிய சிக்கல்களையெல்லாம் எண்ணிச் செயல்பட்டதாகத் தெரியவில்லை. "Realism" – போன்ற ஆங்கிலச்சொற்களுக்குச் தமிழ்ச்சொல் தேட வேண்டியதில்லை, அதற்கு அவசியமே இல்லை — எனக்கருதுகிறார் க. நா. சு. இவ்வளவிற்கும் ஆங்கிலமே கலக்காதத் தமிழ்த்திறனாய்வை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார் க. நா. சு.[1] அந்த நம்பிக்கையை நோக்கியும் அவர் கடைசிவரை முயற்சி எடுக்கவில்லை.

சி. சு. செல்லப்பா "சோஷியாலாஜிகல் விமர்சகன்," "எமோஷனல் ரெஸ்பான்ஸ்" என்றெல்லாம் பெரும்பாலும் அப்படியே எழுதிச் செல்லுகிறார்.[2] பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் "Style" என்ற ஆங்கிலச் சொல்லைத் "சயிலை" என்று தமிழ்ப்படுத்தி எழுதி உள்ளார்.[3] இவர்கள் ஆங்கிலச் சொல்லை மொழியாக்கம் செய்ய நினைத்தாலும் அந்தச் சொல் தமிழாக இராது; வடமொழியாக இருக்கும். "romanticism" — என்ற சொல்லிற்கு "அதிசயோக்தி தத்துவம்" - என சி. சு. செல்லப்பா கலைச்சொல் உருவாக்குகிறார்.[4] "Realism" - என்ற சொல்லிற்கு "பிரத்தியக்ஷ சித்திரம்" — எனத் தருகிறார் கு. ப. ரா[5] "Critic" என்ற சொல்லிற்குப் "பரிசோதனாசிரியர்"[6] "விமரிசகன்"[7], என்றும், "Criticism" என்பதற்குக் விமர்சனம்[8] குணதோஷ விளக்கம்[9] இரசனை,[10] என்றும் சொல்லாக்கம் செய்துள்ளனர். திறனாய்வுத் துறையில் மட்டுமல்ல, மற்ற துறைகளிலும் "சொல்லாக்கம்" என்ற பேரில் "வடமொழிச்சொற்கள்" அதிகம் பயின்று வரும் தன்மை நிலவுகிறது. இதற்குத் தமிழ்ச்சமூகத்தின் அரசியல், பண்பாட்டுச் சூழலே அடிப்படைக் காரணியமாகும். தமிழ்ச்சமூகத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக வடமொழியும் வடமொழி அணிந்த பிராமணர்களும் அறிஞர்களுமே கல்வியிலும் சமூகத்திலும் மேல் நிலையைப் பெற்று வந்தார்கள். எனவே ஆங்கிலேயர் காலத்திலும் அவர்களே மேற்கல்வி கற்றவர்களாக, உயர்பதவி பெற்றவர்களாக இருந்தார்கள். இந்த வரலாற்றுச் சூழல்தான் மொழியாக்கத்தில் வடமொழிச் சொற்கள் பெருவாரியாகத் தென்படுவதற்குக் காரணமாகும்.

இவ்வாறு ஒருபக்கம் தமிழ்மொழியாக்கம் என்ற பேரில் வடமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதைக் கண்ட சிலர், மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கத்தின் சார்பாகத்

தூய தமிழ்ச் சொற்களைப் படைத்தனர். மக்களிடம் பயின்று வராத, மக்களோடு எளிதில் கலக்க வாய்ப்பில்லாத கடினமான சொற்களை இவர்கள் உருவாக்கினர். இவ்வாறு தமிழகத்தில் இருந்த வடமொழி, தமிழ் மொழிப் போராட்டம் இந்தக் கலைச் சொல்லாக்கப் பணியில் குறிப்பிடத் தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதைக் கணக்கில் கொள்ள வேண்டும். இந்தப் போராட்டத்தின் தன்மையை 1930-வாக்கிலேயே செந்தமிழ்ச் செல்வியில் வந்துள்ள மதிவாணனின் கட்டுரை புலப்படுத்தும்

> "முதல் முதல் நாவல் (Novel) எனும் ஆங்கிலச் சொல்லுக்கேற்ற தமிழ்ச் சொல் யாது? 'நாவல்' என்றே தமிழில் எமது ஆசிரியர் வழங்குவது அவர்களது 'மூளை வறட்சியையே' காட்டுகின்றது. இனி, கற்பிதக் கதை என்று சிலரும், 'கற்பனா சரிதை' எனச் சிலரும் சொல்லா நிற்க வேறுசிலர் 'நவீனம்' என்கின்றனர். 'புதுக்கதை' என்றார் மறைமலையடிகள். அதுவும் பொருந்தாப் பெயரே. புதுக்கதை யாதுவெனின் பழங்கதை யாது? ஏன் 'புதினம்' என்று சொல்லலாகாது? இது பற்றி அறிஞர் தம் கருத்தை வெயிடுவாராக[11]"

மற்றொரு செய்தியையும் இங்கே சுட்ட வேண்டும். இத் தொடக்கக் காலத் திறனாய்வாளர்களில் ஒரு பக்கத்தில் சிலருக்குத் தாய்மொழி வளம் இல்லை, மறுபக்கத்தில் சிலருக்கு ஆங்கில மொழிவளம் இல்லை. "இந்தப் பற்றாக்குறை" இன்றும் தொடர்கிறது. கலைச் சொல்லாக்கத்திற்கு அடிப் படையாக "இருமொழிப் புலமை" அமைந்துள்ளது. இதை யாராலும் மறுகக முடியாது

'Plot' - என்ற ஆங்கிலச் சொல்லிற்குக் கிடைத்திருக்கும் மொழியாக்கம் ஆங்கிலத் திறனாய்வுத் துறையில் பெருகிக் கிடக்கும் குழப்பத்திற்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். "சூழ்ச்சி அல்லது சதி" எனச் சிலர் மொழியாக்கம் செய்துள்ளனர். இது "அவர்களது ஞானமின்மையையே காட்டுகிறது" என்பார் கா. சிவத்தம்பி[12], பேராசிரியர் மு. வ. அச் சொல்லிற்குக் "கரு" எனச் சொல்லாக்கம் செய்துள்ளார். இங்கே Theme, Plot வேறுபாடின்றி அவர் மயங்குவதைக் காணமுடிகிறது. இன்னும் இச் சொல்லிற்குக் "கதைப் பின்னல்[13]", கதைக் கரு, கதைப் புலம், கதைக் கோப்பு, கதைத் திட்டம், கதை நிகழ்ச்சி என்று பலவாறான சொற்கள் விளங்குகின்றன.

இதுபோலவே 'Fine Arts' என்பதற்கு இலக்கியம், ஓவியம் முதலிய கலைகளைக் குறிக்கும் சொல்லெனக் கொண்டு 'நுண்கலை' என்பர் மு. வ. ஆனால் சஞ்சீவி 'இன்கலை' என்கிறார். மேலும் 'நுண்கலை' என்ற சொல்லாட்சியை "Sciences or Precision Arts" — என்ற சொல்லிற்கு மொழியாக்கமாகத் தந்து. முற்றிலும் மு வ - விடமிருந்து மாறுபடுகிறார்[14] மேலும் 'Symbol' - என்பதற்குக் 'குறியீடு' என்றும், 'imagism' என்பதற்குப் 'படிமம்' என்றும் பரவலாக வழங்கப்படும் சூழலில் மதுரைப் பல்கலைக் கழக வட்டாரத்தில் (குறிப்பாக பேரா. சச்சிதானந்தம் தமிழண்ணல் முதலியோர்) Symbol என்பதற்குப் 'படிமம்' என்றும், imagism என்பதற்கு உருக்கவிதை (அல்) குறியீடு என்றும் முற்றிலும் எதிர்மறையான நிலையில் வழங்குகின்றனர்.[15]

இத்தகைய குழப்பங்களில் தெரிவது, கா. சிவத்தம்பி கூறுவது போல, "குறித்த கருதுகோள்கள் பற்றி விமர்சகர்களிடையே நிலவும் சமனற்ற அறிவு மட்டங்கள் தாம்" என்பதில் ஐயமில்லை[16] மற்றொரு செய்தியும் இங்கே எண்ணில் பார்க்கப் பட வேண்டும்! கருத்து நிலையில் விளங்கும் இத்தகைய துறைகளில் அந்த மூலமொழிச் சொல்லுக்கே வரையறுக்கப்பட்ட பொருள் இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, 'Reality'. என்ற ஆங்கிலச் சொல்லே போதுமானது. அந்தச் சொல், மெய்ப் பொருளியல், அறிவியல், அளவையியல் பொருளியல், திறனாய்வியல் முதலிய பல துறைகளிலும் பயின்று வருகிறது. அங்கங்கே அதற்கென்று தனிப்பொருள் இருப்பதையும் பார்க்க முடிகிறது. எனவே மொழியாக்கம் மூல மொழியின் முழுப்பொருளையும் தந்துவிடவேண்டும் என எதிர் பார்ப்பதும் தவறு ஒரு சொல், பயன்படுத்தப் பயன்படுத்த, பயன்படுத்தபடும் வெவ்வேறான சூழலுக்கு ஏற்ப, மனித உணர்வுகள் கலந்து முழுப்பொருளையும் காலப்போக்கில் உணர்த்தி நிற்கும்! இது ஒரு தொடர் நிகழ்ச்சி "வார்த்தையைச் சொல்லிச் சொல்லிப் பழக்கித்தான் மெருகையும் பொருளையும் அதற்கு ஏற்ற முடியும்[17] என்பார் வ. ரா. இந்த இடத்தில் கா. சிவத்தம்பியின் கூற்று மிகப் பொருத்தமாக இருக்கிறது.

> "மொழியின் உள்ளடர்ந்த ஆற்றல்களையறிந்து சொல்லாக்கஞ் செய்யாது, எடுத்தவுடனேயே சொற் கடனிலிறங்குவதனால், நாம் எமது பாரம்பரியத்தையும், நவீனத்துவத்தையும் இணைக்க முடியாதவர்

களாகவே இருப்போம். பெரும்பாலும் அத்தகைய இணை நிலையைக் காணதவர்களும் காண முடியாதவர்களும்தான் ஆங்கிலச் சொற்களை அவற்றின் உருவ அமைதி மாறாமல் தமிழிலே புகுத்தி வருகின்றனர். ''[18]

அராபியர்கள் பாக்தாத் பெருநகரில் நூல்நிலையம், கலை மன்றம், மொழிபெயர்ப்பு நிறுவனம் மூன்று அரங்குகளையும் ஓரிடத்திலேயே அடுத்தடுத்து அமைத்து, கிரேக்க நாட்டு அறிவை எல்லாம் பெற்றனர்.[19] இன்றும் உலக அரங்கில் மொழி பெயர்ப்புக் கழகங்கள் பெரும்பங்கு ஆற்றி வருகின்றன.[10] கலைச்சொல்லாக்கம் இன்று ஓர் அறிவியலாக வளர்ந்-திருக்கிறது. மொழிபெயர்ப்பு இயந்திரங்கள் உருவாகி விட்டன. ஆனால் நாமோ இன்றும் கலைச் சொல்லாக்குவதில் திட்டவட்டமான செயல்பாடு எடுக்கவில்லை. 'கலைச் சொல்லாக்கக் குழு' எச்சொல்லைப் பயன்படுத்த விதிக்கிறதோ அச்சொல்லையே அனைவரும் பயன்படுத்த வேண்டும் என்ற நிலை உருவாகாத வரைக் குழபபங்கள் தாம் நீடிக்கும். ''மொழி வறுமை என்பது ஓர் இனத்துக்கும் ஒரு நாட்டுக்கும் விளையும் வறுமையாகும்; மக்களின் அறிவுக்கும் அவர் தொடங்கும் முயற்சிக்கும் நேரும் வறுமையாகும்''[21] - என்பதை நாம் அழுத்தமாக உணர்ந்தாக வேண்டும் - ஒரு கலைச் சொல்லுக்குப் பலவகைப்பட்ட முரண்பட்ட சொற்களைப் பயன் படுத்துவதையும்,[22] நுட்பமான வேறுபாடு உடைய பல சொற் களுக்கு ஒரு தமிழ்ச் சொல்லையே பயன்படுத்தும் தன்மையை யும்,[23] கலைச்சொல் என்ற பேரில் விளக்கம் எழுதும் இயல்பை யும்[24] உடனே நாம் நிறுத்தியாக வேண்டும் - அப்பொழுதுதான் தமிழ்த் திறனாய்வுத் துறையில் நிலவும் பல குழப்பங்கள் மறையும்; இலக்கியத்திற்கும், ஏன் ஓர் இனத்தின் பண்-பாட்டிற்கும் அடிப்படையாக இருக்கும் ''திறனாய்வுப் புலமை'' என்கிற ஒன்றை நாம் எட்ட முடியும். வரன் முறைப்பட்ட திறனாய்வு இல்லாத இடத்தில், வாழ்க்கை என்பதும் இல்லை என்ற உண்மையை உணர்ந்து நாம் உடனடியாகச் செயல் பட்டாக வேண்டும்!

## அடிக்குறிப்புகள்

1) க. நா. சு, விமர்சனக் கலை, ப. 14.
2) சி. சு. செல்லப்பா, தமிழில் இலக்கிய விமர்சனம், ப. 8.

3) எழில்முதல்வன், முதல் புனைகதைத் திறனாய்வாளர், தாமரை, ஏப். 73, இதழ். 10.
4) சி. சு. செ., மே. நூல். ப. 35.
5) ,, ,, ,, ப. 35.
6) சி. வை. தாமோதரம் பிள்ளை, கலித்தொகைப் பதிப்பு முகவுரை.
7) க. நா. சு. செல்லப்பா முதலியோர்.
8) ,, ,, ,,
9) பி. எஸ். சுப்பிரமணிய அய்யர்—பார்க்க தாமரை எப். 73.
10) மார்க்கபந்து சர்மா, சிலப்பதிகார ரசனை
11) மதிமன்னன், தமிழில் இன்றியமையாது வேண்டப்படும் உரைநடை நூல்கள், செ. செ. பத்தாம் சிலம்பு. 1932. 1933, பக்
12) கா, சிவத்தம்பி, நாவலும் வாழ்க்கையும், ப. 65.
13) 'கதைப்பின்னல்' எனக்கூறும் மா. இராமலிங்கம், "கதை, பிளாட் என்ற இருசொற்களும் ஏறத்தாழ ஒரே பொருளுடையன போல் நம்மால் கருதப்படுகின்றன. அது தவறு" என்று கூறி, சிம். எம். பாஸ்டன் கூற்றை எடுத்துக் காட்டுகிறார். அவரது—நாவல் இலக்கியம் பார்க்கவும்.
14) சஞ்சீவி, இலக்கிய இயல் அ. ஆ, ப. 4.
15) வை. சச்சிதானந்தன், மேலை இலக்கியச் சொல்லகராதி பார்க்கவும். திறனாய்வில் கலைச்சொல்லாக்கம் பற்றிய முதல் முயற்சி இந்நூலில் காணக்கிடக்கிறது.
16) கா. சிவத்தம்பி, இலக்கியமும் கருத்துநிலையும் ப. 8.
17) கண்ணன் என்கவி, ப. 162.
18) கா. சிவத்தம்பி, மே. நூல். 7.
19) ஒளவை நடராசன், மொழியும் பெயர்ப்பும், ப. 385.
20) யுனெஸ்கோ சார்பாக, 'பன்னாட்டு மொழி பெயர்ப்பாளர் இணையமே' இயங்கி வருகிறது.—பார்க்க யுனெஸ்கோ கூரியர்—செப்டம்பர் 1988.
21) ஒளவை நடராசன், மே. நூல். ப. 384.
22) irony—விடம்பனம், முரண்உணர்வு, திரிபு, வஞ்சப் புகழ்ச்சி, குறிப்பு, முரண், இளிவரல், கீழறைப்பொருள்,
23) feeling, emotion. passion,—(ஒரே சொல்) உணர்ச்சி.
24) melodrama—உணர்ச்சி வேகம் பெற்ற இன்பியல் நாடகம் (குளோறியா சுந்தரமதி)

நூல் மதிப்புரை

## "வாழ்க்கையில் முன்னேறுவது எப்படி?"

குறளன்பன், ஆ. வே. இராமசாமி.
மதிப்புரையாளர் :
இரா. குருநாதன்,
தமிழ்த்துறை
த. உ. க. க. கல்லூரி.

குறளன்பன் ஆ. வே. இராமசாமியின் திருக்குறள் ஈடு பாட்டை வெளிப்படுத்தும் முகமாக, "வாழ்க்கையில் முன்னேறு வது எப்படி?" என்ற நூலைப் படைத்துள்ளார்! இந் நூலாசிரியரின் பத்தாவது படைப்பாக இந்நூல் இலங்குகின்றது.

பதினைந்து உட்தலைப்புகளைக் கொண்ட இந்நூல் வாழ்க்கை இலக்கணத்தில் தொடங்கி, முயற்சியின் முன்னேற்றத்தில் முடிவடைகிறது. வாழ்க்கையில் முயற்சி செய்பவர்கள் முன்னேறுவர் என்ற உட்பொருளை இந்நூல் நுட்பமாக உணர்த்துகின்றது.

வாழ்க்கையில் சோர்வுற்றவர்களுக்கு அருமருந்தாக இந்நூல் இலங்கின்றது. பெரியோர்களின் கருத்துக்களைச் சான்றாக இந்நூலின் ஆசிரியர் அமைத்துள்ளது நல்ல உத்தியாகும்.

"நேர்மையற்ற முயற்சி, தோல்வியையே கொடுக்கும். அம்முயற்சி வெற்றி பெற்றாலும் பழியையும், துன்பத்தையும் பின்னாளில் கொடுக்கும். ஒழுக்கத்தோடு கூடிய முயற்சி வெற்றியையும், புகழையும் கொடுக்கும்."

"பிறருக்காக வாழும் வாழ்வு தெய்வீக வாழ்வாகும். நேர் மையான நல்ல முயற்சிக்கு மட்டுமே பரம்பொருள் துணை செய்யும்" போன்ற அரிய கருத்துக்கள் காலத்தால் அழியாத பொற்குவியலாகும்.

பத்தியம் இல்லாத அருமருந்தான இந்நூலை எந்நிலையில் உள்ளவர்களும் அருந்தி, அனுபவித்து மகிழலாம்.

# காப்புக் கட்டுதலில் இரு மூலப்படிவ மாதிரிகள்.

க. முத்தையா,
ஆய்வாளர்,
புடிவைப் பல்கலைக் கழகம்,

'காப்பு' என்பதற்குத் தமிழ் லெக்சிகன், பாதுகாவல் காவலாயுள்ளது, காப்புநாண், மூலிகை கெடாமல் இருக்கவும் அதன் கெட்ட குணங்கள் நீங்கவும் அதைச் சுற்றிக் கட்டும் மந்திரக் கயிறு, எடுத்த விசயம் இனிது முடியும் பொருட்டு நூலின் தொடக்கத்திற் செய்யும் தெய்வ வணக்கம் எனப் பல பொருள் தருகிறது. இவ்விளக்கங்கள் யாவும், பல திறத்தானும் நன்மை கருதித் தீயவைகள் அணுகாதவாறு காக்க, நம்பிக் கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பெறும் ஒரு வழக்கம் என்பதைத் தெளிவுறுத்துகின்றன. நாட்டுப்புற வழக்காற்றில் இவ்வழக்கம் இன்றுவரை இருந்து வரும் ஒன்றாகும். இவ் வழக்கம் பற்றிய சில விளக்கங்களையும் சில உளவியல் மதிப் பீடுகளையும் மேற்கொள்ள முயலுகிறது இக்கட்டுரை.

## காப்புக் கட்டுதலின் தோற்றம் :

காப்புக் கட்டுதலின் தோற்றம் வரையறுத்துச் சொல்ல முடியாத நிலையில் இருந்தாலும், சில யூகங்களின் அடிப் படையில் ஒரு முடிவுக்கு வர இயலும். மனிதன் நாடோடி வாழ்க்கை நிலையிலிருந்து, அதாவது உணவு சேகரிக்கும் நிலையிலிருந்து, ஓரிடத்தில் நிலையாகத் தங்கி, உணவு உற்பத்தியில் ஈடுபட்ட காலக்கட்டத்தில் இவ்வழக்கம் தோன்றி-யிருக்க வாய்ப்பிருக்கிறது. ஏனெனில் வேளாண்மையில் நாட்டம் கொண்ட மனிதன், அறுவடையாகிய விளைபொருட் களை, வேறுதீயசக்திகள் கவர்ந்து செல்லா வண்ணம் இருக்கக் 'காப்புக் கட்டுதல்' என்னும் வழக்கம் வந்திருக்க வேண்டும். தற்காலக் கிராம நடைமுறை வழக்கு ஒன்று இதற்குச் சான்று பகருகின்றது.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளின் முதல் நாளன்று 'காப்புக் கட்டு' என்ற பெயரால் விழா கொண்டாடப்படுகிறது. இவ்விழா வேளாண்மையைப் பிரதானமாகக் கொண்டவர்களால் கொண்டாடப்படுவது சிந்தனைக்குரிய ஒன்றாகும். சென்ற ஆண்டு விளைந்த மகசூல் தீய சக்திகளினால் கவரப்படாமல் இருக்கவும், வரும் ஆண்டு விளைச்சலை நோய்கள், கால்

நடைச் சேதங்கள், கள்வர் கவர்வுகள் இன்ன பிறவற்றிலிருந்து காக்கவும், நம்பிக்கையின் பேரில் வேப்பிலை, ஆவரங்குகள், பூழைப்பூ முதலியன கலந்து காடு, வயல், வீடு நெற்குதிர் என வேளாண்மையோடு தொடர்புடைய அனைத்து இடங்களிலும் காப்புக்கட்டப்படுகிறது.

இவ்வழக்கை அடிப்படையாகக் கொண்டு, காப்புக் கட்டுதலின் ஊற்றுக்கண்ணைத் தேடிப்பார்த்தால், வேளாண்மையைப் பிரதானமாகக் கொண்ட மருத நிலத்தின் அதாவது நிலவுடைமைச் சமுதாயத்தின் கொடையாக இது இருக்கக் கூடும்.

## காப்புக் கட்டுதலின் நோக்கமும் வகையும் :

தீய சக்திகள் தம்மை அணுகாதவாறு தடுக்கவும் அணுகிய தீய சக்திகளை விரட்டவும் மேற்கொள்ளப்பெறும் முன் முயற்சியே காப்புக்கட்டுதலின் நோக்கமாக அமைகிறது. காப்புக் கட்டுதலைப் பயன்படுத்தப்படும் பொருட்களின் அடிப்படையில் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. தோரணங்கள் அல்லது இலைகளைக் காப்பாகக் கட்டுதல்.
2. கறுப்புக் கயிற்றைக் காப்பாகக் கட்டுதல்.
3. மஞ்சள் கயிற்றைக் காப்பாகக் கட்டுதல்.

இவற்றில் கறுப்புக்கயிற்றைக் காப்பாகக் கட்டுதலும் மஞ்சள் கயிற்றைக் காப்பாகக் கட்டுதலும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

## மனித மனமும் நிறங்களும் :

இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞான ரீதியாக மனிதனைப் பற்றி ஆராய முனைந்த துறைகளுள் உளவியல் துறையும் ஒன்று மனிதனின் நடத்தையை (Behaviour) மனிதமனமே நிர்ணயிக்கிறது என்பது உணரப்பட்டபோது மனித நடத்தைகளைப்புரிந்து கொண்டால் அவனது மனத்தைப்புரிந்து கொள்ளலாம் என்பது துணியப்பட்டது. பிராய்டின் மாணவரான 'யுங்' மனித மனத்தில் ஏராளமான கருத்துப்படிவங்கள் பொதிந்து கிடக்கின்றன என்பதை உணர்ந்து அத்தகைய படிவங்களுக்கு 'ஆர்க்கிடைப்ஸ்' (Archetypes) எனப் பெயரிட்டார். இத்தகைய கருத்துப்படிவங்களில் ஒன்றுதான் நிறங்கள் பற்றிய

தாகும். மனத்தில் கிடக்கின்ற மூலப்படிவங்களின் பிரதிகளாக (Versions of Arichetypes) நிறங்கள் அமைகின்றன. நன்மை, தீமை என்ற மூலப்படிவங்களின் பிரதிகளாக முறையே மஞ்சள் நிறமும், கறுப்பு நிறமும் அமைகின்றன. இத்தகைய கருத்துப் படிமங்கள் பாரம்பரை பரம்பரையாகக் கடத்தப்பட்டு நம்பிக்கை களாகவும் (Belief) பின்னர் மக்கள் வாழ்வோடு இயைந்த சடங்காகவும் (ritual) பரிணமிக்கின்றன. மனித ஆழ் மனத்தில் பதிவு செய்யப்பட்ட மஞ்சள், கறுப்பு என்ற நிறங்களுக்கும், காப்புக்கட்டுதலுக்கும் உள்ள தொடர்பை இனிக் காணலாம்.

கறுப்பு நிறம் தீய சக்திகளின் குறியீடாக / வெளிப்பாடாகக் கொள்ளப்பெறுகிறது. தமிழ் அகராதியும் 'கரி' என்பதற்கு 'நஞ்சு' 'தீய்தல்' என்று விளக்கம் தருகிறது தீயசக்திகளை ஒட்டு மொத்தமாகக் குறிக்கக் கிராமமக்கள் வழங்கும் சொல்லே இதனை உறுதிப்படுத்தும். ஆம்! 'காக்கா கறுப்பு' என்ற பெயர்களாலேயே தீய சக்திகளை அழைக்கின்றனர். இங்கு மனித ஆழ் மனத்தில் 'தீமை' என்ற கருத்துப்படிமத்திற்கு உரிய பிரதியாக கறுப்பு நிறம் கொள்ளப்பெறுகிறது. Evil Archetype என்ற மூலப்படிவத்தின் பிரதிபலிப்பாக அல்லது பிரதியாக 'கறுப்பு' அமைகிறது. எனவே கறுப்பு நிறம் என்பது One of the vesion of Evil Archetype-ஆக அமைகிறது.

கண்பட்டு விடாமல் இருக்க, கறுப்புப்பொட்டைக் கன்னத் திலோ, நெற்றியிலோ வைத்தல் இன்றளவும் வழக்கத்தில் உள்ள ஒன்றாகும். அதுபோல் கிராமப்புறங்களில் அசைவ உணவுகளைச் சுடுகாடு, இடுகாடு, முனியப்பன் கோயில் போன்ற தீய சக்திகள் உறையும் இடங்களைத்தாண்டி எடுத்துச் செல்லுகையில் ஒரு அடுப்புக் கரித்துண்டை அந்த அசைவ உணவில் இட்டுச் செல்வதைக்காண முடிகிறது. அவ்வாறு கரித்துண்டை இடாமல் சென்றால் தீய சக்திகள் அசைவ உணவின் சத்துப்பொருட்களை உறிஞ்சி சுவையில்லாத வெறும் சக்கையாக்கி விடுவதோடு அதனைக் கொண்டு செல்வோரை யும் தாக்கிவிடும் என்ற நம்பிக்கை அம்மக்களிடத்து நிலவுகிறது. தீய சக்திகள் அசைவ உணவின் மீது அதிக விருப்புக் கொள்வதை இலக்கியங்களும் காட்டுகின்றன. இவைகள் தீமையின் வடிவமாகிய கறுப்பை விரட்ட அல்லது அதிலிருந்து தம்மைக் காக்கக் கறுமை நிறமே பயன்படுத்தப்படுவதைத் தெளிவாக்குகின்றன. இது ஒரு வகையில் முள்ளை முள்ளால் எடுப்பது போன்றதாகும். அதாவது தீயவைகளைக் கொண்டு தீயவைகளை நீக்கிவிடலாம் என்ற நம்பிக்கையின் பாற்பட்ட

தாகும். இங்கு Evil Archetype என்ற மூலப்படிவம் ஒரு சமூக நம்பிக்கையை (Social Belief) உண்டு பண்ணுவதைக் காண முடிகிறது.

**மகப்பேறும், கறுப்புக் கயிறும் :**

பெண்கள் மகப்பேற்றுக் காலங்களில் தீய சக்திகள் தம்மை அணுகாதவாறு இருக்க, கறுப்புக் கம்பளிக்கயிற்றைத் திரித்துத் தம் இடது காலில் காப்பாகக் கட்டுகின்றனர். பொதுவாக, பெண்கள் மகப்பேற்றுக் காலங்களில் உடல் பலவீனமும், உள்ள பலவீனமும் உடையவர்களாக இருப்பதால், தீயசக்திகள் இலகுவில் அவர்களை ஆட்கொண்டுவிடும் என்ற நம்பிக்கையின் பேரில் கறுப்புக்கயிறு கட்டப்படுகிறது. இதில் இருநிலைகள் உண்டு.

1) தீய சக்திகள் தம்மிடம் வருமுன்னர் காத்தல்
2) தீய சக்திகள் தம்மிடம் வந்த பின்னர் காத்தல்

பெரும்பாலும் வருமுன்னர் காத்தலே பின்பற்றப்படுகிறது. ஒவ்வொரு பெண்ணும் மகப்பேற்றுக் காலங்களில் கறுப்புக் கயிற்றைக் காப்பாகக் கட்டுதல் ஒரு சடங்காகவே கொள்ளப் பெறுகிறது.

தீயவைகளிலிருந்து காக்கச் கறுப்புப்பொட்டை வைப்பதும் கரித்துண்டை இட்டுச்செல்வதும் சமூக நம்பிக்கை. ஆனால் மகப்பேற்றுக் காலத்தில் பெண்கள் கறுப்புக்கயிறு கட்டுதல் ஒரு சமூகச் சடங்காகிறது. மனத்தளவில் இருக்கும் நம்பிக்கை செயலளவில் வரும்பொழுது சடங்காவதைக் காணமுடிகிறது. இவற்றிலிருந்து பெறப்படுப் செய்திகளாவன :

மனித ஆழ்மனத்தில் தீமைக்கெனத் தனியான ஒரு மூலப்படிவம் Evil Archetype) இருந்துள்ளது. அதன் வெளிப்பாடாகக் கறுமை நிறம் (Block is version of the Evil Archetype) அமைகிறது. இது பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்பட்டு ஒரு சமூக நம்பிக்கையாக (Social Belief) மலர்கிறது. இது மேலும் வளர்ந்து சமூகச் சடங்காக (Social ritual) மாறுகிறது. எனவே கறுப்புக் கயிற்றைக் காப்பாகக் கட்டும் வழக்கத்திற்கு அல்லது சடங்கிற்கு. மனித கனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தீமை பற்றிய கருத்துப்படிமம் காரணியாக அமைவதை அறிய முடிகிறது. இங்கு முன்னர் குறிப்பிட்டது போல, மனித மனத்தைக் கொண்டு, மனித நடத்தையையும்

(Behaviour) மனித நடத்தையைக் கொண்டு மனித மனத்தையும் அறியலாம் என்ற உண்மை பரிசோதனைக்குட்படுத்தப் பட்டதனை அறிய முடிகிறது. இவ்வாறே ஒவ்வொரு நடத்தைக்கும், மனத்தில் பதிவு செய்யப்பட்ட மூலப் படிவங்களே காரணங்களாக அமைவதை விளக்கிச் செல்ல முடியும். இனி மஞ்சள் நிறம், காப்புக் கட்டுதலில் பெறும் இடம்பற்றிக் காண்போம்.

## மஞ்சள் கயிறும் காப்புக் கட்டுதலும் :

காப்புக்கட்டுதலில் பெரும்பங்கு வகிப்பது மஞ்சள் கயிறு தான். மஞ்சள் நிறம் மங்களகரத்தின் சின்னமாக, குறியீடாகக் கொள்ளப்பெறுகிறது. 'மாங்கல்யம்' உட்பட உலகியல் வழக்கில் இன்றளவும் மஞ்சள் நிறத்தின் செல்வாக்கைக்காண முடிகிறது. 'மஞ்சள் குங்குமத்துடன் நீடுழி வாழ்க' என்ற வழக்கும் மஞ்சள் நிறம் வளமையுடன் தொடர்புள்ளதை விளக்கும். எனவே மஞ்சள் நிறம் நன்மை அல்லது வளமை என்ற மூலப்படிமத்தின் பிரதியாக (Yellow is one of the good Archetype) அமைகிறது. மங்களகரமான மஞ்சள் கயிற்றைக் கட்டுவதன் மூலம் மங்கலம் தம் வாழ்க்கையிலும் வரும் என்பதற்காகக் கட்டப்படுகிறது. இது போலச் செய்தலின் மூலம் சக்தியைப் பெற முடியும் என்ற நம்பிக்கையின்பாற்பட்டதாகும்.

கறுப்புக்கயிறு கட்டுவதற்கும், மஞ்சள் கயிறு கட்டுவதற்கும் உள்ள முக்கியமான வேறுபாடு முன்னது தீயவைகள் தம்மை அணுகாதவாறு இருப்பதற்காகக் கட்டப்பட்டுவது, பின்னது தாம் தீயனவற்றை அணுகாதவாறு இருப்பதற்காகக் கட்டப் படுவது. வேண்டுதல்களின் பேரிலும், நன்றிக்கடனின் பொருட்டும் அம்மன் கொடை நாட்களில் தீச்சட்டி எடுக்கும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. தீச்சட்டி எடுப்பவர்கள் ஒரு வாரம் அல்லது பதினைந்து நாட்களுக்கு முன்னதாகத் தம் கையில் மஞ்சள் கயிற்றைக் காப்பாகக் கட்டுகிறார்கள். தீச்சட்டி எடுத்து முடிக்கும் வரை மனம், மொழி, செயல் முதலிய எல்லா நிலைகளிலும் தீயவைகள் எனப்படுபவன வற்றில் தாம் ஈடுபடாமல் இருப்பதற்காகக் காப்புக்கட்டப் படுகிறது. காப்புக் கட்டிய நாள் முதல் அவர்கள் மேற் கொள்ளும் நல்லொழுக்கங்களின் அடிப்படையில் தீச்சட்டி எடுத்தல் வெற்றியும், தோல்வியும் அடைவதாக நம்புகின்றனர். இதிலிருந்து, தீயவைகளைத்தாம் அணுகாதவாறு இருப்பதற்காக மஞ்சள் கயிறு காப்பாகக் கட்டப்படுவதை அறிய முடிகிறது.

இவற்றிலிருந்து பெறப்படும் செய்திகளாவன, நன்மை அல்லது வளமை என்ற மூலப்படிவத்தின் (good Archetype) பிரதிபலிப்பாக மஞ்சள் நிறம் அமைகிறது. (yellow is one of the version of the good Archetype) நல்லொழுக்கங்களின் அடிப்படையில் தீச்சட்டி எடுத்தல் வெற்றியும் தோல்வியும் அடையும் என்ற எண்ணம் நம்பிக்கையாக (Belief) மலர்கிறது. இந்த எண்ணம் செயல் அளவிற்கு வரும்பொழுது அதாவது மஞ்சள் கயிற்றைக் காப்பாகக் கட்டும் பொழுது அது சடங்காக (richual) மாறுகிறது.

**முடிவுரை :**

இக்கட்டுரை, காப்புக்கட்டுதலின் கூறுகளாகிய கறுப்புக் கயிறு கட்டுதலையும், மஞ்சள் கயிறு கட்டுதலையும் மட்டும் எடுத்துக்கொணடு, உளவியல் ரீதியாக விளக்கம் காண முற்பட்டுள்ளது.மனித ஆழ்மனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பல்வேறு கருத்துப்படிவங்கள் பல்வேறு வகைகளில் வெளிப்பட்டு, நம்பிக்கைகளாகவும், சடங்குகளாகவும் வளர்ச்சி பெற்றுள்ளதைத் தொட்டுக்காட்டுகிறது. மனிதப்பழக்க வழக்கங்களுக்கும், சடங்குகளுக்கும் மனப்பதிவுகளே காரணம் என்பதையும் வலியுறுத்துகிறது.

## கவிஞர் கண்ணதாசனின் 'புஷ்பமாலிகா'வில் நம்பிக்கை மலர்கள்

புவனா, (I பி. காம்.)

மனித வாழ்வில் இலக்கு தெரியாமல் நாம் பயணிக்கும் போது எத்தனையோ இடறல்கள், பள்ளங்கள், மேடுகளை சந்திக்க நேர்கிறது.

இதில் விழுந்தும், எழுந்தும் செல்லும் மனங்களில் புலம்பல்கள், கதறல்கள்.

இதற்கு மருந்தாக, கவிஞர் கண்ணதாசன் எழுதியுள்ள 'புஷ்பமாலிகா' கட்டுரை விளங்குகிறது.

'புஷ்பமாலிகா' என்றால் பலவித மலர்கள் கொண்ட மாலை என்று பொருள்படும் நாம் அந்த மாலையில் உள்ள 'நம்பிக்கை' மலர்களை மட்டும் பார்ப்போம்.

'கவிஞர்' தன் கட்டுரையில், "காலிலே குத்திய பின்பு, 'இது முள்ளென்று நெஞ்சு சொல்கிறதே அது குத்துவதற்கு முன்பு கண் சொல்லிவிடக்கூடாதா?", என்று கேட்கும்போது

நம் கால்கள் கட்டுப்படுகிறது.

கண்கள் நிதானமாய்ப் பாதையை ஆராய்கிறது.

இக்கால மனிதர்களிடையே மனவலு (will power) குறைந்து வருகிறது. 'இதை எப்படி நாம் செய்யப்போகிறாம்' என்ற மலைப்பு, 'நம்மால் முடியாது' என்ற நினைப்பு இதனால் விளைவதே தவிப்பு.

இதை நீக்க 'கவிஞர்' கூறுகிறார். அருமையான உவமை.

"தாமரையின் தண்டையும் வேரையும்விட அதன் புஷ்பம் பெரியது.

தன் அளவுக்கு மீறிய புஷ்பத்தை வெளியிடும் சக்தி அதற்கிருந்தது.

கொடுமையான நரகங்களிலும் சொர்க்கங்கள் முளைத்தெழ முடியும்.

மனம் தான் காரணம்"

இதைப் படிக்கும் போது மலைப்பும் திகைப்பும் அடிபட்டுப் போகிறது.

மனம் மலையாய் எழுகிறதல்லவா.

கோபம், மோகம், பொறாமை, ஆசை இவைகள் தான் மனதை அலைபாய வைக்கிறது.

அலைபாயும் மனதிற்கு எதுவும் அகப்படுவதில்லை.

'கவிஞர்' சொல்வது போல' உணர்ச்சிச் சூறாவளியின் மைய மண்டபத்தில் மனித ஈசல் தவியாய்த் தவிக்கிறது.

நினைத்தது கிடைக்காவிட்டால் துக்கம் வருகிறது. ஆனால் வந்ததையே நினைத்துவிட்டால் சொர்க்கம் கிடைக்கிறது.

"தேவை கடலளவு
கிடைத்தது கையளவா ?
மெத்தச் சரி !

இப்போது உன் கைதான் கடல்" இவை 'புஷ்பமாலிகா' வில் உள்ள அற்புத வரிகள்.

அலைபாயும் மனதை அடக்க உதவும் அஸ்திரம்.

ஒரு சில கடமைகளுக்குப் பலன் இன்றி போகும் போது மனித மனம் உடைந்து போகிறது.

ஆனால், "உன் கடமையின் விளைவுகள் எப்படி இருக்கும் என்று உன்னால் இன்று கண்டு கொள்ள முடியாது.

ஆனால், உன் மரணம் அவற்றைப் பேசும்." என்ற கண்ணதாசனின் வரிகளைப் படித்தப் பிறகு ?

உடைந்த மனம் ஒட்டிக்கொள்கிறது கடமைகளுக்காக எழுந்து நிற்கிறது.

'சரி, நம்பிக்கை பிறக்கிறது.

ஆனால், விழுகின்ற அடி அதை விட வேகமாக விழுகிறது.

மனம் தளர்ந்து போகிறதே, எப்படி ? நாம் கேட்கிறோம். அதற்கும் நம்பிக்கை தருகிறார். மனதை கட்டுப்படுத்தி நிம்மதி அடைவோம். மேலும் துன்பம் வருகிற போது அதை 'விதி' என்று விலக்கி விடச் சொல்கிறார்.

இதற்கு 'கண்ணதாசன்' தன்னையே ஈடுபடுத்தி ஒரு கதை போலச் சொல்கிறார்.

"குழம்பிலே உப்பு அதிக மென்று தண்ணீர் ஊற்று கின்றேன். தண்ணீர் அதிமாகிறது.

தண்ணீர் அதிகமென்று உப்பைப் போடுகிறேன். உப்பு அதிகமாகிறது.

நான் ஒரு நல்ல சமையல் காரனல்ல; எனக்குத் தெரிகிறது.

அந்தப் பக்குவத்தைப் பெறுதெப்படி? அடிக்கடி குடித்துப் பார்த்து சரியாக சமைப்பது போல், அடிக்கடி உள்ளத்தை அடக்கிப் பயன்படுத்திக் கொள்ள முயல்கிறேன்.

ஒழுங்கான சுவை வருகிறது.

அதே நேரத்தில், கூரையில் இருந்த பல்லி, குழம்பிலே விழுகிறது.

என்னால் பண்படுத்தப் பட்ட உள்ளத்தில் என்னை அறியாமல் சலனம எழுகிறது.

இறைவா!

அங்கேதான் நீ விளையாடுகிறாய்." இந்தப் புலம்பலில் புதுமை இருக்கிறது. நம் மனமும் தெளிகிறது.

ஒரு அரிய, அற்புத அனுபவத்தை 'அறிந்து' விட்டோம் இனி அவ்வளவு தான் என்று நினைக்காதீர்கள்.

இதோ புஷ்பமாலிகாவின் ஒரு பூ, "பிறரது அனுபவங் களிலிருந்து பாடம் பெற்ற பிறகாவது சுயதரிசனம் பூர்த்தியாகி விடுகிறதா?

இல்லை!

சுயமாகவும் கொள்முதல் செய்ய வேண்டும்."

துன்பம் ஒரு நாய். அதனிடம் கருணை காட்டாதீர்கள் உங்களையே சுற்றும்.

விரட்டுகிற நாயை, நிமிர்ந்து துரத்துங்கள் ஓடிப்போகும்.

கிடைக்காத ஒன்றுக்காக ஏங்குவதை நிறுத்துவோம்.

'கண்ணதாசன்' சொல்வது போல், 'விரும்பியது அமையா விட்டால், அமைந்ததை விரும்பு'.

"எதிர்பார்ப்பது அதிகமானால் கிடைப்பது குறைவாகவே தோன்றும்."

துயரங்களில் மூழ்குவதை மறந்துவிடுவோம். அமைதியும், அன்புமே நம் முன்னேற்றத்திற்குத் தேவை.

இறை நம்பிக்கை இருந்தால் 'கவிஞர்' சொல்லி இருக்கும் படி இறைவனை வேண்டுங்கள்.

"பரந்த வானத்தில் இவனொரு வெண்ணிலாவாக இல்லா விட்டாலும், நட்சத்திரமாகவாவது மின்னவிடு.

சினந்தணிந்த மனிதனாக,
இனந் தெரிந்த மனிதனாக,
மனந் தெளிந்த ஞானியாக—இவனை மாற்று."

இந்த "அமரகவியின்" புஷ்பங்களை முகர்ந்து பார்த்தால் நம்பிக்கை மணம் நம்மோடே

---

# முதல் தமிழ் நாவல்களில் மரபும் எதிர்ப்புணர்வும்

டாக்டர். கி. இராசா
தமிழ் விரைவுரையாளர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி - 620 024.

இலக்கிய வரலாற்றில், சமுதாய மரபைப் போற்றுதலும், அதை எதிர்த்தலும் இணைகோடுகளாகக் காணப்படுகின்றன. மரபைப் போற்றும் உணர்வு ஓங்கியிருக்கும்போது மரபை எதிர்க்கும் உணர்வு அடங்கியிருக்கிறது; காலப்போக்கில் மரபை எதிர்க்கும் உணர்வு வாழ்வு பெறும்போது, மரபைப் போற்றும் உணர்வு பின்னால் தள்ளப்படுகிறது. எனவே இலக்கிய வரலாற்றில் மரபைப் போற்றுதலும், அதை எதிர்த்தலும் எப்போதும் காணப்படுகின்றன.

இந்த உணர்வுகளின் உச்சநிலைத் தாக்கத்தைப் புதியதாக அறிமுகமாகும் இலக்கிய வகைகளில் காணலாம். சான்றாக நாவல் இலக்கிய வகை தமிழுக்கு அறிமுகமாகிய காலக்கட்டத்தில் ஆண்டாண்டுக்காலமாகக் கடைப்பிடித்து வந்த மரபுகளைக் காப்பாற்றுவதற்கும், நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்துவராத மரபுகளைக் கீழே தள்ளிவிட்டுப் புதிய மரபுகளை அறிமுகம் செய்வதற்கும் ஒரு போராட்டமே நிகழ்ந்துள்ளது எனலாம். இந்தப் போராட்டம் ‘எடுத்தோம், கவிழ்த்தோம்’ என்ற கண்மூடித்தனமான போக்கில் நிகழ்வதில்லை. இவை அறிவியல் முறையிலான - படிப்படியான மாறுதல்களைக் காட்டுகின்றன.

மக்கள் மரபைத் தெரிந்துகொள்ளாமல் எந்த ஓர் இலக்கியமும் தோன்றுவதில்லை என்பதைப் படைப்பாளிகள் அறிவர் இலக்கிய மரபுக்கும் இது ஏற்புடையதாகும்) சிலர் பழைய மரபுகளைக் காப்பதற்காக இலக்கியங்களைப் படைக்கின்றனர். வேறு சிலர் இருக்கின்ற மரபைக் காட்டுவதற்காகச் சில இலக்கியங்களைத் தோற்றுவிக்கின்றனர்; இன்னும் சிலர் மரபின் சில பண்புகளோடு வேறுபட்டுப் புதிய இலக்கியங்களை உருவாக்குகின்றனர். மேலும் சிலர் மரபையே முற்றிலும் ஒதுக்கி தள்ளிவிட்டு - அதை எதிர்த்து - புதிய வாழ்க்கை மரபுகளை அறிமுகம் செய்கின்றனர். இவ்வாறு புதியதாகத் தோன்றும் இலக்கியம், மரபைக் காத்தல் (Reproduction), மரபைக்காட்டுதல்

(Reflection), மரபிலிருந்து விலகுதல் (Refraction), மரபை எதிர்த்தல் (Revolt) என்ற படிப்படியான மாறுதல்களின் மூலம் புதிய மரபுகளைப் புழக்கத்திற்குக் கொண்டு வருகின்றது இது எந்த ஓர் இலக்கியத்திற்கும் பொருந்திவரும் ஒரு பொதுவான போக்காகும். முதல் தமிழ் நாவல்களில் இப்போக்கின் வளர்ச்சியைக் காணலாம். முதல் தமிழ் நாவல்கள் வரிசையில் பிரதாப முதலியார் சரித்திரம் (1876), கமலாம்பாள் சரித்திரம் (1896), பத்மாவதி சரித்திரம் (1900), ஞானாம்பிகை (1913), கமலாக்ஷி (1903) தீனதயாளு ஆகியவை இடம் பெற்றுள்ளன.

## 1. மரபைக் காத்தல் போற்றுதல் :

புதிய இலக்கியவகை ஒன்று (குறிப்பாக வேற்றுநாட்டு / மொழி இலக்கிய வகை) முதலில் அறிமுகமாகும்பொழுது, அதன் வழியாகப் புதிய பண்பாடுகள் புகுந்துவிடாமல் காப்பதற்குப் பலரும் விரும்புவர். இதில் சில படைப்பாளிகள் எச்சரிக்கையாகச் செயல்படுகின்றனர். இந்தியாவில் ஆங்கிலேயராட்சியின்போது ஆங்கில நாகரிகமும் பண்பாடும் தமிழ்ப் பண்பாட்டில் கலக்கத் தொடங்கின. இதனை வெறுத்து ஒதுக்கியவர்கள், தம் வெறுப்பை எதிர்ப்பைப் பலவழிகளில் காட்டினர். ஆங்கிலேயர் நாகரிகத்தையும் தத்துவத்தையும் குறைகூறுவதன் மூலமும், சொந்த நாட்டு மரபுகளின் பெருமையைப் பேசுவதன்மூலமும் படைப்பாளிகள் தம் மண்ணின் மரபுகளைக் காக்க முயன்றனர். இத்தகு போக்கினைக் காலநோக்கில் முதல் நாவலாகக் கருதப்படும் பிரதாப முதலியார் சரித்திரத்தில் காணலாம்.

இந்நாவலில் ' படித்துக்கெட்டவன் ' என்ற அத்தியாயத்தில் தேவராஜப்பிள்ளை எனும் பாத்திரத்தின் வாயிலாக ஆங்கிலேயர் தத்துவத்தை நாவலாசிரியர் குறை கூறுகின்றார்; " இங்கிலீஷில் ஜன்மார்க்கமான புஸ்தகங்கள் எத்தனையோ இருந்தாலும் அவைகளை அனந்தையன் வாங்குகிறதும் இல்லை; படிக்கிறதும் இல்லை. லெக்கி, எல். ஸ்டீபன், பெயின், டார்வின், கம்டி. எஸ்., மில், ஹெர்பர்ட்ஸ்பென்சர், ஹக்ஸ்லி ஹியும், காலின்ஸ், டின்டால், வால்டேர் முதலான வேத விரோதிகளுடைய கிரந்தங்களை அவன் படித்ததினால் தெய்வம் இல்லை; உலகமே சுகம் என்கிற சித்தாந்தம் உள்ளவனானான் " என்கிறார். மேற்சுட்டப்பட்ட ஆங்கில சீர்திருத்தவாதிகளும், அறிவியலறிஞர்களும், புரட்சியாளர்களும் எழுதிய நூல்கள், இந்நாட்டில் தொன்றுதொட்டு வருகின்ற

நம்பிக்கையான தெய்வம், வேதம், பாவ புண்ணியம் இவற்றிற்கு எதிரானது என்று கருதியதால் வேதநாயகம்பிள்ளை இவர்களை 'வேத விரோதிகள்' என்கிறார். இதில் பிள்ளையவர்களின் மரபைக் காக்கும் / போற்றும் நோக்கு வெளிப்படக் காணலாம். இந்நாவலில் இடம்பெறும் அனந்தையன் மேலை நாட்டுப் பழக்கவழக்கங்கள் கைவரப்பெற்றவனாகக் காட்டப் படுகின்றான். கண்டதைச் சாப்பிடுதல், குடித்தல், ஊர் சுற்றல், என்பனவெல்லாம் மேலைநாட்டு மோகத்தால் விளைந்த தீமைகள் என்று அனந்தையன் வாயிலாக வேதநாயகம் பிள்ளை காட்டுகிறார். இதுவும் பிள்ளையவர்களின் மரபைக் காக்கும் நோக்கையே சுட்டுகிறது.

பிரதாப முதலியாரின் மனைவியாக வர இருக்கின்ற ஞானாம்பாளைப் பற்றி முதலியாரின் பாட்டி கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும் "...... அவள் அறிவாலும், நற்குணங்களிலும் உன் தாய்க்குச் சமமானவள் என்று நினைக்கிறேன் ... நான் வியாதியாயிருக்கும் காலங்களில், எனக்குப் பத்திய பாகங்கள் செய்துகொடுத்து உன் தாயாரே எனக்குச் சகல பணி விடைகளும் செய்து வருகிறாள்". இங்கு, பெரியோர்க்குப் பணிவிடை செய்வதால் மட்டுமே பரிபூரணத்துவம் அடைந்து விடுகின்ற ஓர் இந்துப் பெண்ணைக் காண்கிறார். (இன்று அவளுக்குப் பல பரிமாணங்கள் உண்டு) நாவலின் முன்னுரையிலேயே வேதநாயகம் பிள்ளை தம் படைப்பின் நோக்கத்தை ஓரளவு புலப்படுத்திவிடுகிறார். "நான் கடவுள் பக்தி புகட்டியிருக்கிறேன் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் செய்ய வேண்டிய கடமைகளையும் வற்புறுத்தியிருக்கிறேன் ........ தமிழில் இம்மாதிரி உரைநடை நவீனம் பொதுமக்களுக்கு இது வரை அளிக்கப்படவில்லை. ஆகையால் இந்நூல் வாசகர்களுக்கு ரசமானதாகவும், போதனை நிறைந்ததாகவும் இருக்கலாம் எனப் பெருமை கொள்கிறேன்" எனும் முன்னுரையில் மரபைச் சிதைத்துவிடாமல புதிய இலக்கியத்தை அறிமுகம் செய்யவேண்டும் எனும் பிள்ளையவர்களின் கவனம் வெளிப் படுகின்றது.

கலைநோக்கில் பார்த்தால் ராஜம் அய்யரின் கமலாம்பாள் சரித்திரத்தைத்தான் முதல் தமிழ் நாவல் என்று சொல்ல வேண்டும் ராஜம் அய்யர் வேதாந்த விஷயங்களில் ஊறிப் போனவர் விவேகானந்தரைத் தம் குருவாக ஏற்று வழி பட்டவர். 'புரபுத்தா பாரதா' என்ற வேதாந்த சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர். வேதாந்த விஷயங்கள் குறித்து

ஆங்கிலத்தில் பல நூல்களும் கட்டுரைகளும் எழுதியவர். எனவே கமலாம்பாள் சரித்திரத்தில் ராஜம் அய்யர் வேறு, வேதாந்த விஷயங்கள் வேறு என்று பிரித்தறிய முடியாது. நடப்பியல் நோக்கில் நாவல் சிறந்திருந்தாலும் ஆன்ம பரிபக்கு வத்தையே கருப்பொருளாகக் கொண்டுள்ளது. இவரது எழுத்துக்களில் புதிய மரபுகளின் வரவை எதிர்க்கும் போக்குக் காணப்படவில்லை. ஆனாலும் 'ஆத்மஸ்வருப' தரிசனத்தை வழிபட்டு 'ஞானானந்த வைபவ சாகரத்' தில் முழ்கியிருக்கும் தத்துவத் திறவுகோலாக நாவல் முடிகிறது.

## 2. மரபைக் காட்டுதல் :

தொன்றுதொட்டு வரும் மரபுகள் அனைத்தையும் மக்கள் கடைப்பிடிப்பதில்லை காலமாற்றத்தின் காரணமாகச் சில மரபுகள் வீழ்கின்றன; சில மரபுகள் வாழ்கின்றன. வாழும் மரபுகளைக் காட்டுவதும் படைப்பாளர்களின் நோக்கமாக — படைப்பின் அடிப்படையாக — விளங்குகிறது இதற்கு, ஞானாம்பிகை என்ற நாவலுக்குப் பொன்னுசாமிப்பிள்ளை எழுதிய முன்னுரை நல்லதொரு சான்றாகும். இதில் "காலாந் தரமாக வழங்கி வருகின்ற ஸதாசாரங்களின் இடையில் சில துராசாராங்களும் கிளைத்துத் தலைகாட்டி வருவது தற்காலத் தில் பிரத்யக்ஷமான விஷயம். அவைகளுள் எளிதில் சீர்திருத்திக் கொள்ளக்கூடிய சிலவற்றை எடுத்துக்காட்டினால் அவைகளை விளக்கலாம். அதனால் நமது தேசம் சிறப்படையவும் ஒருவாறு முகாந்திரம் ஏற்படுமென்பதே இக்கதைகளை எழுதுவதில் நான் முக்கியமாகக் கொண்டிருக்கும் உட்கருத்து" என்று பொன்னுசாமிப்பிள்ளை குறப்பிடுகிறார். இதன்மூலம் காலத்திற்கு ஒவ்வாத சில 'ஆசாரங்களை' எடுத்துக்காட்டி அவற்றைக் களையும் வழிகளைச் சொல்வதில் சொன்னுசாமிப்பிள்ளை ஆர்வம் கொண்டிருந்தார் என்பதை அறியலாம். அவர் தாம் எழுதிய கமலாக்ஷி என்ற நாவல் முன்னுரையில் 'உலகானுபவத்தை ஒட்டி இக்கதையை எழுதத் துணிந்தேன் என்று குறிப்பிட்டுள்ளார். மக்களிடையே வாழும் மரபுகளைக் காட்டுவதே இவரது நோக்கம் என்பதை இக்குறிப்பும் உறுதி செய்கிறது.

கமலாக்ஷி ஆசிரியர் பொன்னுசாமிப்பிள்ளை தம்முடைய பாத்திரங்களுக்கு மூலம் கூறும்போது, "இளமையில் தென் னாட்டுத் தமிழ் மக்களிடையில் வளர்ந்து வேளாளர் முதலா னோருடைய குடி வாழ்க்கை வகைகளையும் அவர்கள் இயல்பை

யும் நான் நெருக்கமாகப் பழகியிருக்கிறேன். இரங்கூன் நான் துரைத்தன சேவை செய்திருந்த இடமாகையால் நாட்டுக் கோட்டை நகரத்து ஸாவகாரிகளான வேளாண் செட்டிகளோடு கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக நெருங்கிப்பழகி அவர்கள் இயல்பையும் அறிந்திருக்கிறேன். ஆகவே என்னுடைய கதை கள் பெரும்பாலும் வேளாண்குடிமக்களையும் வேளாண் செட்டி களையுமே பற்றியிருக்கும் என்று கூறுகிறார். இதேபோன்று ராஜம் ஐயர், கமலாம்பாள் சரித்திரத்தில் தம்முடைய படைப்புக் கலை பற்றிக்கூறும்பொழுது,பொன்னம்மாளது சூழ்வினையிலும், சங்கரியது கொலைத் தொழிலிலும், சுப்புவின் கலகத் திறனிலும், நடராஜனது விவரமறியா இளமையிலும், ராம சேஷய்யரது வாஞ்சாரூபமான முதுமையிலும் லட்சுமி ஸ்ரீநிவாசனது மனோதர்ம விசேஷத்திலும் கமலாம்பாளது பக்தி வைபவத்திலும் முத்துஸ்வாமி ஐயரது ஆத்மானந்தத்திலும் ஈடுபட்டதாகக் கூறுகிறார். இவ்வாறு வாழும் மாந்தரிடம் காணப்படும் பழக்க வழக்கங்களை, பண்புகளை எடுத்துக் காட்டுவதையும் தொடக்க காலத் தமிழ் நாவல் படைப்பாளிகள் தம் நோக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

### 3. மரபு விலகல் :

காலத்திற்கு ஒவ்வாத மரபுப்பண்புகளை எடுத்துக்காட்டிச் சீர்திருத்தம் செய்வதற்கு அறிவுறுத்துவதோடு மட்டுமல்லாமல், சில புதிய மரபுகளையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற சிந்தனையும் படைப்பாளிகளிடம் காணப்படுகிறது. இவர்கள் மரபினை முற்றிலுமாக வெறுத்து ஒதுக்குவதில்லை ; மரபுகளில் சீர்திருத்தம செய்ய முயலுகிறார்கள்; புதிய மரபுகளை அறிமுகம் செய்கிறாகள். இவ்வமையில் மாதவய்யாவின் (1874—1926) படைப்புகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

மாதவய்யாவின் பார்வை மரபைவிட்டு விலக முற்படுகிறது என்பதற்கு,பத்மாவதி சரித்திரத்தில் இடம்பெறும் நாராயணனின் மனப்பேராட்டம் நல்லதொரு சான்றாகும்.

"நம்முடைய முன்னோர்களைப் போலிருந்துவிட்டால் ஒரு தொந்தரவுமில்லை. இப்பொழுது இந்த இங்கிலீஸ் வாசிக்கப் போய், அவர்கள் ஏற்படுத்திய அநேக வழக்கங்கள் முற்றிலும் பிசகாக மனதுக்குத் தோன்ற, அவற்றை விட்டுவிட்டுச் சரியானபடி நடப்போமென்றால் நம்மைப் போன்ற கற்றுத் தேர்ந்திராத பந்துக்களாயுள்ள பெரியவர்கள் தடையாயிருக்

கிறார்கள். நம்மைப் பெற்று வளர்த்து இங்கிலீசும் படிப்பித்து விட்ட மாதா, பிதா இஷ்டப்படி அவர்களைத் திருப்தி செய்கிறதா ? அல்லது நூதனமான படிப்பின் பயனாக நம்முடைய மனத்திற்கு நல்லதாகத் தோன்றியபடி நடக்கிறதா?'' நாராயணன் மூலமாக மாதவய்யா தொடங்கி வைத்த இப்படிப்பட்ட மனங்களின் இரண்டாட்டம் பழமைக்கும், புதுமைக்கும் ஏற்பட்ட போராட்டம் என்று கருதலாம்.

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு ?' என்று கருத்து ஆழவேரூன்றியிருந்த ஒரு காலக்கட்டத்தில் '......... புருஷர்கள் மட்டும் படிக்கவேண்டுமென்றும், இல்லாவிட்டால் இழிவென்றும், பெண்கள் படியாமல் மூடத்தனமாயிருக்கலாமென்றும் நம்மவர்கள் எண்ணுகிறார்களே இதென்ன நியாயம் ?' என்று நாராயணன் மூலமாகக் கேட்கிறார், மாதவய்யா. படித்த பெண்களுக்கு எவ்வித மனக்குறையும் இருக்காது என்பதை அறிவுறுத்தும் முகமாக, "சாவித்திரியோ கோபாலன் குழந்தைகளைப் பற்றிய வேலையில்லாத நேரத்தையெல்லாம் கல்யாணிக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதிலும், தான் படிப்பதிலும், தன்னை வாத்தியாராகக் கொண்டு தலை வீட்டில் வந்து கற்கும் ஏழெட்டுக்குட்டிகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுப்பதிலும் கழிக்கிறாள். அவள் மூகத்தைப்பார்த்தால் யாதொரு விதமான மனக்குறைவும் அவளுக்கிருந்ததாகத் தோன்றவில்லை" என்று மாதவய்யா எழுதிச்சொல்கிறார். இதன்மூலம் குடும்பத்தை ஒரு பல்கலைக்கழகமாகக் காணும் கருத்திற்கு முனைனோடியாக மாதவய்யா திகழ்கின்றார். விஜயமார்த்தாண்டம் என்று மாதவய்யாவின் மற்றொரு நாவலாகும். இதில் விஜயமார்த்தாண்டன் புதுமையின் அடையாளமாகவும் சங்கிலித்தேவர் பழமையின் அடையாளமாகவும் படைக்கப்பட்டுள்ளார்.

இச்சான்றுகளையெல்லாம் ஒன்றாக வைத்துப் பார்க்கும் போது, கண்மூடித்தனமாக மரபுகளை விட்டொழித்து அவற்றின் இடத்தில் புதிய மரபுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே மாதவய்யாவின் சமுதாயப் பார்வையாகவும் படைப்புப் பார்வையாகவும் விளங்குவதை அறியலாம்.

## 4. மரபு எதிர்ப்பு :

வாழும் சமுதாயத்தின் ஆணிவேர்களாகக் கருதப்பட்ட மரபுகள், வளர்கின்ற சமுதாயத்திற்குப் பயனளிக்காது என்ற

நிலையில் அவற்றைக் கிள்ளி எறிகின்ற போக்கே மரபு எதிர்ப்பு ஆகும். தயவு தாட்சண்யம் என்பதோ, பழையதில் கொஞ்சம்-புதியதில் கொஞ்சம் என்ற இணக்கமோ—இணைப்போ இதில் எதிர்பார்க்கப்படுவதில்லை. இந்தப் போக்கினைத் தொடங்கி வைத்துப் படைப்பாளிகளுக்குத் தைரியமூட்டியவர் மாதவய்யா ஆவார். இவர் எழுதிய ஆங்கில நாவல்களையும் பார்க்க, இவரது தமிழ் நாவல்களில் மரபு எதிர்ப்புப் போக்குகள் மிகச்சில இடங்களிலேயே புலப்படுகின்றன. இவர் காட்டியுள்ள ஆண்-பெண் உறவு நிலைகள் அக்காலச் சூழ்நிலையில் பெரும் புரட்சி என்றே கூறவேண்டும். இதற்கு பத்மாவதி சரித்திரத்திலிருந்து ஒரு காட்சியை எடுத்துக்காட்டலாம்.

சாலாவின் கையை இழுத்து அவமானப்படுத்துவதன் மூலம், அவள் கணவன் ராஜமையர் தன் நண்பனின் காதலி சாவித்திரி மீது மையல் கொண்டு எழுதியதற்குப் பழிக்குப் பழி வாங்கலாம் என்று கோபாலன் கருதுகிறான். கருதியதுபோல அவன், சாலாவின் கையைப் பிடித்து இழுக்கிறான். ஆனால் அவன் நினைத்தற்கு மாறாக, சாலா ''...... கருடனைக் கண்ட சர்ப்பம் போல் பதறி ஓடாமல், கொஞ்சம் புன்சிரிப்புடன் அவன் அருகே வந்து மேலே சாய்ந்து கொண்டு நின்றாள்...... ' இங்கே யாராவது வந்து விடுவார்கள் ! மேடைக்கும் போவோம் வா ! என்றாள். கோபாலனுடைய நாக்கு கொஞ்சம் சுவாதீனம் அடைந்து, ' மேலே நானு இருக்கான் ' என்று சொல்லிற்று. சாலா, ' அப்படியானால் இப்போது ஏன் கூப்பிட்டாய் ? அப்புறம் பார்த்துக் கொள்வோம். மறந்து விடாதே. அதோ பார் வாசலில் யார் சத்தமோ கேட்கிறது ; நான் போகிறேன், என்று சொல்லி கோபாலனுடைய இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டுவிட்டு வீட்டுக்குள் விரைவாகப் போய்விட்டாள்''. இவற்றை விரசம் என்ற சாயம் பூசி விமர்சிப்பதைக் காட்டிலும் சமுதாயத்தில் சில இருண்ட மூலைகளை வெளிச்சம் போட்டுக் காட்டிய, ' உபயம் ' என்றே கருதவேண்டும்.

இட்போக்கின் வளர்ச்சியை மாதவய்யா எழுதிய Lieut. Co. Panju என்ற ஆங்கில நாவலில் பார்க்கலாம். ராமச்சந்திர தீட்சிதருக்கு மகப்பேறு இல்லாததால் எல்லோரும் அவர் மனைவி சுபலத்தை மீது குறை கூறுகின்றனர். ராமச்சந்திர தீட்சிதர் பெண் விஷயங்களில் பலவீனமானவர். இன்னொரு திருமணத்திற்கு ஏங்குகிறார். இதை எப்படி மனைவியிடம்

சொல்வது என்று தெரியாமல் தவிக்கிறார். இதை உணர்ந்து கொண்ட கமலம், வேறொருத்தியை மணந்துகொள்வதை விட, தன் மாமா மகள் லட்சுமியை மணந்து கொள்ளுமாறு தீட்சிதருக்கு, எடுத்துச் சொல்கிறாள். "But what care I hereafter ? If wed you well, I shall not stand in my way, only after all that have I suffered, let me have to know and be subject to some strange upstart girl in this house. Wed my cousin's daughter, Lakshmi .. she will be a sister to me, and I think I shall not feel it so much if it is she" பெண்கள் இந்நாளில் கூட சொல்வதற்கு அஞ்சுகின்ற— மறுக்கின்ற கருத்தை மாதவய்யா அந்நாளிலேயே செல்லுபடியாக்கிவிட்ட போக்கை இது காட்டுகிறது.

இவர் எழுதிய Clarinda என்ற முற்றுப்பெறாத ஆங்கில நாவலிலும் சமூக மரபு எதிர்ப்புணர்வின் செல்வாக்கினைப் பார்க்கலாம். தஞ்சை மராட்டிய அரசரின் அதிகாரியான ஓர் அந்தணரின் பெண்ணை, அரசகுடியைச் சார்ந்த கிழவர் மணம் செய்து கொள்கிறார். விரைவில் அவர் இறந்து விடுகிறார். மாமியார், நாத்தனார் கொடுமை அவளைச் சிதைக்கே கொண்டு செல்கிறது. தக்க சமயத்தில், இவளுக்கு முன்பே பரிச்சயமான ஆங்கிலத் தளபதி தலையிட்டு இவளை மீட்கிறான். இருவருக்கும் திருமணம் நடக்கிறது. மதம் மாற வேண்டும் என்ற வற்புறுத்தலுக்கு இணங்கமுடியாமல் இவள் மனத்தில் இரண்டாட்டம் நிகழ்கிறது. தளபதி இறக்கிறான். இவள்முடிவில் தன் பெயரை 'கிளாரிந்தா' என்று மாற்றி ஞானஸ்நானம் பெறுகிறாள். பாளையங்கோட்டையில் ஒரு மாதாகோவிலை நிறுவி தேவ ஊழியம் செய்கிறாள். இவர் எழுதிய Muthu Meenakshi : The Autobiography of a Brahmin Girl என்ற நூலின் ஒரு பிரதிகூட இன்று கிடைக்கவில்லை என்கின்றனர். இந்நாவல் 903ல் வெளியானபோது இந்து நாளிதழில் பலத்த எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன என்பதையும் அறிகிறோம்.

இவ்வாறு முதல் தமிழ் நாவல்களின் போக்கையும் படைப்பாளிகள் நோக்கையும் ஒன்றாக வைத்துப் பார்க்கும்பொழுது பின்வரும் சில முடிவுகளுக்கு நாம் வரலாம்.

தமிழில் தோன்றிய முதல் உரைநடை நவீனமான பிரதாப முதலியார் சரித்திரத்தில் மரபைக் காக்கும் உணர்வு விஞ்சிக்

இதன் தொடர்ச்சி 364ஆம் பக்கம் பார்க்க

# இந்தியச் சிந்தனையாளர்களும் திருவள்ளுவரும்

அ. பாண்டுரங்கன்,
தமிழ்ப் பேராசிரியர்
துணைத்தலைவர்,
புதுவைப் பல்கலைக் கழகம் - 609 602.

0 திருவள்ளுவர்தம் கருத்துகள் இன்று உலகப் பொது மறை என்று கொள்ளத் தக்க வகையில் புது விளக்கங்கள் பெற்று ஏற்றம் பெற்று வருகின்றன. அனைத்துலக மாந்தனை நோக்கிப் பேசும் பாங்கிலே அவர் தம் சிந்தனைகள் மலர்ந்துள்ளன. திருவள்ளுவ மாலையில் காணப்பெறும் வெண் பாக்களை இயற்றிய புலவர்கள் இந்நுட்பத்தினை அன்றே உணர்ந்து பாராட்டியிருக்கின்றனர்.

"என்றும் புலராது யாணர் நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்" த் திருக்குறள்.

விளங்குவதை இறையனார் கற்பக மலரோடு உவமித்தனர். வள்ளுவப் பெருந்தகை "தம் குறள் வெண்பா அடியில் வையத்தார் உள்ளுவ எல்லாம் அளந்தார்" என்று பரணர் பாராட்டினார். இவ்வாறு போற்றிய பண்டைச் சான்றோர்கள் திருக்குறளைச் சமயக் கணக்கர் மதிவழி செல்லாது உலகியல் இதுவென உன்னி உரைத்த நூல் என்று சுட்டவும் மறக்க வில்லை. "வேதப்பொருளை விரித்து உலகோர் ஓதத்தமிழால் உரை செய்தார்" என்றும் "செய்யா மொழிக்கும் திருவள்ளுவர்

---

36ஆம் பக்கத் தொடர்ச்சி

காணப்படுகின்றது. பொன்னுசாமிப்பிள்ளை எழுதிய ஞானாம்பிகை, கமலாக்ஷி ஆகிய நாவல்களில் மரபைக் காட்டும் உணர்வு அதிகமாக உள்ளது. மாதவய்யாவின் பத்மாவதி சரித்திரத்திலும் இவ்வுணர்வு மேலோட்டமாகக் காணப்படுகிறது. பத்மாவதி சரித்திரம் மரபு விலகலுக்கு வழிவிட்டுள்ளது. இதன் வளர்ச்சியாகக் காணப்படும் மரபு எதிர்ப்பு உணர்வு மாதவய்யா எழுதிய ஆங்கில நாவல்களில் முழு வடிவம் பெற்றுள்ளது.

இந்த நான்கு படிநிலைகளாகிய நோக்குநிலை புதிதாக அறிமுகமாகும் எந்தவோர் இலக்கிய வகைக்கும் பொருத்திப் பார்க்கக் கூடிய அளவிற்கு இடம் தருகிறது. இதுவே இந் நோக்குநிலையின் சிறப்பாகும்.

மொழிந்த பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே" என்றும் இந்தியச் சிந்தனையாளர்களோடு வள்ளுவரை ஒப்பிட்டுக் காணும் முயற்சிகள் திருவள்ளுவ மாலையில் காணப்படுகின்றன. ஆயின் திருவள்ளுவர் இந்தியச் சிந்தனையாளர்களின் கருத் தோட்டங்களிலிருந்து சிற்சில இடங்களில் மாறுபடுகிறார் என்பதை அவருடைய பாக்களின் அமைப்புத் தெளிவாகச் சுட்டுகின்றது. அத்தகு குறட்பாக்கள் சிலவற்றை இக்கட்டுரை எடுத்துக்காட்ட முயல்கின்றது.

*0.1.* இந்தியக் தரும சாத்திரங்களில் பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டது. நால் வகை வருணங்களையும் இறைவனே படைத்தான் என்னும் கருத்து கீதைபோன்ற நூல் களிலும் இடம்பெற்றுள்ளது மது தரும சாஸ்திரங்கள் வருணா சிரமப் படியில் அந்தணர்களுக்கு முதன்மை கொடுக்கின்றன. அந்தணர்களுக்கும் அவர்தம் வேள்விகளுக்கும் எதிரான குரலைத் திருவள்ளுவர் சிந்தனையில் காண்கிறோம்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்" —(குறள் 30)

என்னும் பாடலில் அந்தணத்துவம் பிறப்பினால் வருவதன்று என்று வள்ளுவர் சுட்டுகின்றார் அந்தணர் என்பதற்கு நச்சினார்க்கினியர், "அந்தத்தை அணவுவார் அந்தணர் என்றது வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பார்" (கோ. வடிவேலு: ப. 42) என விளக்கவுரை நல்கினார். எனினும், பரிமேலழகர் இக்கொள்கைக்கு உடன் படாது "அந்தணரென்பது அழகிய தட்பத்தினையுடையார் என ஏதுப்பெயராதலின், அஃது அவ் அருளுடையார் மேலன்றிச் செல்லாது" என்று மறுத்துரைத்தார். அந்தணர் என்பவர் யார்? என்ற வினாவைத் தாமே எழுப்பிக்கொண்டு அதற்குத் தாமே விடை கூறுதல் போன்று இக்குறள் அமைந்துள்ளமை எண்ணிப்பார்க்கத் தக்கது.

பிறப்பினால் முதன்மை வருவதில்லை என்பதை மற்றோ ரிடத்திலும் வள்ளுவர் ஒரு கொள்கை முழக்கமாகத் தருகின்றனர்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" —(குறள். 972)

இக்குறளுக்கு விளக்கம் தருகின்ற பரிமேலழகர் வருணக்கோட் பாட்டுக்கு உடன்பட்டவராகத் தோன்றுகிறார். ஆனால் தெள்ளத்

தெளிவாக "மக்கள் ஆகிய அனைவருக்கும் பிறப்பின்கண் ஒரு வேற்றுமை இல்லை" (காலிங்கர்) என்பதே வள்ளுவமாகத் தெரிகின்றது. இது பிறர் கருத்தை மறுத்துத் தன் கருத்தினை நிறுவும் உத்திகளில் ஒன்றாகும்.

வருணாசிரமக் கோட்பாடுகளை மறுக்கின்ற வள்ளுவர் அதற்கு அடிப்படையாக அமைந்த வேள்வியையும் மறுக்கின்றார்.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று" —(குறள். 259)

வேதங்கள் வேள்விகளையும் உயிர்ப்பலிகளையும் போற்றி வளர்த்தன. கௌதம புத்தரும், மகாவீரரும் வேத வேள்விக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தனர். அவர்களின் அரும்பெருஞ் செயல்களால் வேள்வித்தீயில் பலியிடுதல் குறைந்தது. வைதிகத்தின் பகைவர்களான இவர்களைத் திருஞானசம்பந்தர் "வேத வேள்வியை நிந்தனை செய்துழல் ஆதமில்லி அமணொடு தேரர்" (திருஞானசம்பந்தர் : 3956) என்று பழிக்கின்றார். வேள்வியையும் புலால் மறுத்தலையும் பேசும் திருவள்ளுவர் வேள்வி மறுப்பாகவே இக்குறளை அமைத்துள்ளார். எனினும், பரிமேலழகரும் மணக்குடவர் போன்ற திருக்குறள் உரைகாரர்களும் ஒப்பீட்டுப் பார்வையிலேயே விளக்கம் தருகின்றனர். "வேள்வியினும் புலால் மறுத்தல் நன்று" என்று புலால் உண்ணாமையைச் சிறப்பிக்கிறார்களே அன்றி, திட்டவட்டமாக இது வேள்வி மறுப்பாக, வைதிக மறுப்பாக அமைகின்றது என விளக்கினார் அல்லர். இக்குறளைக்கொண்டு வள்ளுவர் வைதிகத்துக்கு மாறுபட்டவர் எனலாமா? எனின், அவர் குரல் சில இடங்களில் வைதிகத்தையும் ஒலிக்கின்றது. "இந்திரனே சாலுங் கரி" (குறள் 25), "அடியளந்தான்" —(குறள் 610), "தாமரைக்கண்ணான் உலகு" (குறள். 1103) என்பன இக்கூற்றுக்கு அரணாகின்றன.

"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை" —(குறள். 37)

இக்குறளுக்கு உரைவகுத்த பரிமேலழகர் போன்ற உரையாளர் அறத்தின் பயனைக் காட்சியளவாலே இது விளக்குவதாகக் கூறினர் இவர்களைப் பின்பற்றியே கோ-வடிவேலு செட்டியாரவர்களும் "தருமத்தின் பயன் சப்தப் பிரமாணத்தாலேயன்றிப்

பிரத்தியட்சப் பிரமாணத்தாலுமறியப்படும்" (ப 50) என்று விளக்கினார். திரு. வி. க அவர்களும் பழைய மரபுகளுக்கு எதிரான புது விளக்கத்தை இக்குறளுக்குத் தந்துள்ளனர்

வருணாசிரம தருமத்தில் பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்ற நால்வகை ஒழுக்கம் வலியுறுத்தப்படுகின்றது. பிரமசரியத்திலிருந்து படிப்படியான வளர்ச்சியின் முடிந்த நிலையாக முடிமணியாக—சந்நியாசம் வலியுறுத்தப்படுகின்றது. திருவள்ளுவர் இவ்வைதிகச் சிந்தனைக்கு எதிராக இல்லறம் துறவறம் என்ற இரண்டு நிலைகளையே வகுத்துக் கொண்டு, இல்லறத்துக்கே முதன்மை அளிக்கின்றார்.

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன்" (குறள் : 46)

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை" (குறள் : 47)

"ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து" (குறள் : 48)

இம்மூன்று குறள் மணிகளாலும் துறவினும் இல்லறமே சிறந்தது என ஒப்புமை வகையான் கூறிய வள்ளுவர்.

"அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை" (குறள் : 49) எனத்தேற்ற ஏகாரம் கொடுத்துத் தம் கொள்கையை-இல்லறமே சிறந்தது என்னும் கோட்பாட்டை—நிறுவுகின்றார்.

"அறியார்" என்று எதிர்மறுத்துப் பேசும் பாங்கும் திருவள்ளுவரிடம் காணப்பெறுகின்றது.

"அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" (குறள் : 76)

அறத்தை நிலை நிறுத்துவதற்கு மட்டுமன்று; மறத்தைக் கடிதற்கும் அடியோடு நீக்குதற்கும் அன்பே அடிப்படை என்பதைக் காந்தி அடிகளின் வாழ்க்கை நம் கண் முன்னர் எடுத்துக் காட்டியது. இது திருக்குறளில் தனிமனித அறமாக வலியுறுத்தப்படுகின்றது. காந்தியடிகள் இதனை அரசியல் அறமாகவும் கடைப்பிடித்து ஒழுகினார். மகாகவி சுப்பிரமணிய பாரதியார், காந்தியடிகளின் வாழ்வைப் புகழ்ந்து பாடும்பொழுது

பெருங்கொலை வழியாம் போர்வழி யிகழ்ந்தாய்,
அதனினும் திறன்பெரி துடைத்தாம்

அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்று நீ அறிந்தாய் ..
(— பாரதியார் கவிதைகள் : ப. 230)

என்று பாராட்டுகின்றார்.

இந்திய அறநூல்கள் பிரமசரிய நிலையிலும் சந்நியாச நிலையிலும் பிறர் மாட்டுச் சென்று பொருளை இரந்து பெற்று வாழ்தலை ஒப்புக் கொள்கின்றன; ஒரு நெறியாக வகுக்கின்றன.

" இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை " (குறள் : 41)

என்பதற்கு விளக்கம் தருகின்ற திருக்குறள் உரையாசிரியர்களும் பிரமசாரியும் வானப்பிரத்தனும் சந்நியாசியும் ஏற்று வாழலாம் இல்லறத்தான் அவர்களுக்குத் துணை என்று விளக்குகின்றனர். அறநூல்கள் ஏற்றுக்கொண்ட இரத்தலை வள்ளுவர் உடன்பட மறுக்கிறார்; எந்த நிலையினும் உழைத்து வாழவேண்டுமே அன்றிஇரந்து வாழ்தல் கூடாது என எதிர்மறுத்துப் பேசுகின்றார். இச்சிந்தனைப்போக்கு பொருட்பாலில் இரவச்சம் அதிகாரத்திலும் தொடர்கின்றது

" ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல் " (குறள் : 1066)

ஆகாத்தோம்பல் ஒரு பேரறமாக வைதிக சமயத்தில் வலியுறுத்தப்படுகின்றது. பொருள் கொடுத்துப்பெற வேண்டாது கிடைக்கின்ற நீரைக்கூட, ஆகாக்தோம்பும் அறத்துக்காகக் கூடப் பெறக்கூடாது என்று வலியுறுத்தும் வள்ளுவம் வைதிகத்திலிருந்து மாறுபடுகின்றது.

துறவினை மேற்கொள்வோர் சில புறக்கோலங்களைப் புனைகின்றனர். பௌத்தப் பிக்குகள் தலையை மழுங்க முண்டிப்பர்; சமணர்கள் தலை மயிரைப் பறித்தெறிந்து துறவினை மேற்கொள்ளுவர்; இதனை உலோச்சனம் என்பர். உலோச்சனார் என்ற சங்கப்புலவர் பெயர் இவ்வடிப்படையில் அமைந்தது. வைதிகர் முடியை வளர்த்துச் சடையாக்கிக் கொள்வர். உண்மைத் துறவிகளுக்கு இத்தகைய புற வேடங்கள் வேண்டா என்கிறார் வள்ளுவர்.

" மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் " (குறள் : 280)

(தொடரும்)

( சென்ற இதழ் தொடர்ச்சி )

## குறுநாவல் — சில விளக்கங்கள்

டாக்டர் இரா. சண்முகவேலன்,
எம். ஏ., பி. டி., எம்.பில்., பி.எச். டி.,
தேர்வுநிலைத் தமிழ் விரிவுரையாளர்,
அ. வீ. வா. நி. திரு. புட்பம் கல்லூரி,
பூண்டி - 613 503.

### 6. இதழ்களின் தேவைக்கேற்ப எழுதப்பெறும் நாவற் சுருக்கமே சுருக்கப்பட்ட நாவலே குறுநாவலாகும்:

"சிறுகதை பற்றிய எனது நூலில் குறுநாவல், சிறுகதைக்கும் நாவலுக்குமுள்ள பாலம் போன்ற ஒரு வடிவம் என்ற கருத்தைக் கூறியுள்ளேன். இங்கு வாழ்க்கைச் சித்திரிப்பு அமைப்பில் இவ்வுப வடிவத்தின் பயன்பாடு யாது என்பதை அறிந்து கொள்ளுதல் நலமாகும். பூரண நாவலாகவோ, சிறுகதையாக வோ கொள்ள முடியாத புனை கதைகளை குறுப்புக்கதை என்பர். இரசிய நாவலிலக்கிய வளர்ச்சி குறுநாவலின் இலக்கியப் பயன் பாட்டை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. இரசிய மொழியில் குறுநாவல்கள் 'பொலொஸ்த்' எனக் குறிப்பிடப்படும். வாழ்க்கையின் பரிமாணங்கள் விரிந்து செல்லச் செல்லப் பூரண மான நாவல் மூலம் (அதாவது பூரணமான மனித உறவுத் தொடர்களை சித்திரிப்பதன் மூலம்) வாழ்க்கையிலுள்ள தேடலைக் காட்ட முனைவதிலும் பார்க்க, 50,000, 40,000 அமைந்ததாய், கதாநாயகனது அறிவார்ந்த அகத்தேடலை அவனை முக்கிய மையமாகக் கொண்டு விளக்க முனைவது நல்ல இலக்கிய முயற்சியாக அமைகிறது" எனப் பிரபல விமர்சகர் குஸ்தெற்சோவ் கூறுகிறார். பொவொஸ்துக்களில் கதாநாயகனது மனோநிலைப்பட்ட சித்தரிப்பே முக்கியமாக அமைந்துள்ள தென்பர். குறுநாவலை 'நாவலின் ஒரு அத்தியாயம்' என்று கூறுவோருமுளர்.

ஆயினும், தமிழில் குறுநாவல் என்பது சம்பவக்கோவைப் பிடியிலிருந்து முற்றிலும் விடுபடாதிருப்பது வெளிப்படை. குறுநாவலில் பாத்திரங்கள் குறைவெனினும் முக்கிய பாத்திரத் தின் மனோநிலையை ஆழமாக ஆராயும் வழக்கு இன்னும் நன்கு தோன்றவில்லை என்று கூற வேண்டும். இன்றைய நிலையில் சஞ்சிகைகளில் வெளியீட்டு வசதிக்காக நாவற்

சுருக்கங்களும், சுருக்கப்பட்ட நாவல்களுமே குறுநாவல்களாக வெளியிடப்படுகின்றன எனக் கூறத் தோன்றுகிறது" என்றுரைப்பார் டாக்டர் கா. சிவத்தம்பி. [15]

## 7. விரிவான சிறுகதை குறுநாவல்

"ரொம்பப் பேர் சிறுகதை என்பது குறைந்த பக்கங்களை கொண்டது என்று பொதுவாக ஓர் அபிப்பிராயம் வைத்துள்ளார்கள். மேலெழுந்த வாரியாக இதுசரிதானே என்று நானும் நினைத்ததுண்டு. ஆனால் உண்மையில் குறைந்த பக்கங்களையும் அதிக பக்கங்களையும் தீர்மானிப்பது எது? அனுபவ பூர்வமாகப் பார்க்கும்போது ஒரு பத்திரிகையின் பக்கங்களை அனுசரித்தே சிறுகதைகள் என்றும், அதிக பக்கங்களுடையனவற்றைக் குறுநாவல்கள் என்றும் இங்கு சொல்ல நேர்ந்தது.

இலக்கிய வடிவங்கள் என்ற பகுப்பறிவுடன் பார்க்கையில் இங்கு, குறுநாவல்கள் என்று அழைக்கப்படுவனவெல்லாமே சிறுகதைகள் தாம். பத்திரிகையின் பக்க அளவுகளுக்குச் சற்று அதிகமான சிறுகதைகள் அவை.

அப்படியென்றால் குறுநாவல் என்ற ஒரு வடிவமே கிடையாதா? என்ற கேள்வி எழுகிறது. இலக்கிய ரீதியான பதில் 'இல்லை' என்பதேயாம். விஸ்தாரமான சிறுகதைகளைக் குறுநாவல் என்று ஒரு வசதிக்காகவே வழங்கி வருகிறோம் என்று தோன்றுகிறது.

அது எவ்வாறேனும் ஆகுக. நான் அண்மைக் காலத்தில் எழுதியுள்ள பல சிறுகதைகளுள் ஒன்றே இது (ஒரு மனிதனும் சில எருமை மாடுகளும்) என்று குறிப்பிடுவதே என் நோக்கம்" என்கிறார் த. ஜெயகாந்தன். [16]

## 8. கதையாசிரியரின் தன் அனுபவப் பரப்பை விரித்தெழுதாமல் உணர்த்த உதவும் ஓர் இலக்கிய வடிவம் குறுநாவல். அது அதன் பண்பாகும்.

"இதழ்கள் வழி மக்களிடையே செல்வாக்குப் பெற்ற ஆக்கமுறைய படைப்புகள் நாவலும் குறுநாவலும் ஆகும். பத்திரிகை தேவையாலும் வாசகரின் ஆர்வச் சூழலாலும் புதிய படைப்பு நெறி தோன்றியது. 'அதுவே குறுகிய காலத்தில் படித்து முடிக்கக் கூடிய குறுநாவலாகும். நாவல் படிக்கப்

பொறுமையும் காலமும் இல்லாதவர்கள் குறுநாவல் எனும் இலக்கிய வகையை வரவேற்றனர். நாவலின் குறுக்கமும் சிறு கதையின் நீட்சியும் குறுநாவலை உருவாக்கியிருக்குமோ என்று ஐயம் எழுவது இயற்கை.

வாழ்க்கையின் அனுபவப் பரப்பு (Range of life) மிகுதி யாகக் காட்டப் பெற்றால் பெருநாவல் ஆகிறது. குறுநாவலில் அப்பரப்பை மிகுதியாகக் காண முடியாது. காலப் பின்னணியும் இடப் பின்னணியும் நாவலில் பெரிய அளவில் அமையும். ஆனால் குறுநாவலின் பின்னணி (setting) குறுகிய அளவில் அமைகிறது கதையை இணைக்கும் கிளை நிகழ்ச்சிகள் (linking episodes) நாவலில் விரிவாக்கப்பெறும் குறுநாவலிலோ விரிவாக்கம் பெறாமல் இருக்கும். எனினும் விரித்து எழுத வாய்ப்பு இருக்கும் வகையில் அமையும். நாவலில் பாத்திரப் பண்பு விரிவாக மிகுதியாகச் சொல்லப்பட்டிருக்கும். குறுநாவலில் பாத்திரப் பண்பு இருக்க வேண்டியதுதான். எனினும் மிகுதி யாகச் சொல்லப்பட வேண்டியதில்லை.

கதைப் பொருட் கூறுகள் (Elements of story) இரண்டிலும் மிக அதிகம். பல மனிதர்களின் பண்புகளை ஒன்றாக்கிக் கதை மாந்தரை உருவாக்கம் செய்வதை இரண்டிலும் காணலாம். கதை மாந்தர் நாம் எங்கோ சந்தித்தது போன்ற உணர்வு ஏற்படும் வகையில் படைக்கப்பட்டிருக்கும்.

குறுநாவலில் கிளைக் கதைகளை அமைக்கும்போது சில உத்திகளைப் படைப்பாளிகள் கையாள்கின்றனர். உய்த்துணரும் படியாக அமைப்பது, நினைவோட்ட உத்தியில் கூறுவது, உள் ளமைப்பு நிலையில் படைப்பது, சிறப்பியல் காட்சிகளாகக் காட்டுவது ஆகிய உத்திகள் குறுநாவல்களில் இடம் பெறுகின்றன நினைவு அலைகள் (Thought wavas) வழியாக உள்முகப்படைப்பு மிகுதியாக இருப்பதற்குக் காரணம் உளவியல் நாட்டமே. இதனால் உள்ளுணர்வு வெளிப்படுகிறது. தானாகச் சொற்செட்டு அமைந்துவிடுகிறது. தனிமனித நிலையைக்கூறும் பண்பு நாவல் இலக்கியத்தில் மிகுந்து வரவரக்குறுநாவல் தோன்ற வாய்ப்பு ஏற்பட்டுவிடுகிறது...

சொற்களைவிட மனக் காட்சிகளுக்குக் குறுநாவலில் மிகுதி யான இடம் உண்டு எனவே குறுநாவலில் நினைவோட்ட அமைப்பைப் பயன்படுத்துகின்றனர்.

நாவலில் நிகழ்ச்சிகளுக்கு அப்பால் கருவைப் புலப்படுத்தும் முறை உள்ளது. குறுநாவலில் கருவை நோக்கி நிகழ்ச்சி அமைந்து இருப்பதைக் காணலாம்.

நாவலில் மோதலை நிகழ்ச்சிகளை நோக்கிப் படைப்பதே பெருவழக்கு. குறுநாவலில் மோதல் கருவை நோக்கிப் படைக்கப் பட்டிருக்கும். மோதல் கருவை நோக்கிப்போவதால் பாத்திரத்தின் பேச்சும் செயலும் குறைய, கதையும் குறுகிக் குறுநாவல் ஆகின்றது.

நாவலும் இல்லாமல் சிறுகதையிலும் அடங்காமல் இருக்கும் ஓர் அமைப்பிற்குக் குறுநாவல் என்று பெயரிடப்பட்டது. பிரஞ்சு இலக்கியத்தில்தான் குறுநாவல் ஒரு புனைகதை இலக்கியம் என்று கருதப்பட்டு வந்தது. இதனை Novelette என்று வழங்கினர். நீண்ட சிறுகதை, சிறுகதை இலக்கியப் பிரிவாகும். நீண்ட சிறுகதை குறுநாவலாகாது. நாவலிலிருந்து அளவால் சுருங்கிய நாவல், நாவலின் ஒரு பிரிவே எனினும் இப்புனைகதை வகை தனியானது. நாவலில் பல பாத்திரங்கள் இடம் பெற்றுக் கதை விரிவாகச் செல்லும். குறுநாவலில் ஒரு வாழ்க்கைப் போக்கைச் சித்திரிக்க ஒரு பாத்திரம் என்ற வகையில் அமையும் அப்பாத்திம் வாழ்க்கையின் ஒருபார்வையை (A view of life) விளக்குவதாவே இருக்கும். அது முழுமைப்பாத்திரமாகவும் ஏனைய ஒரு பக்கப் பாத்திரமாக (Flat)வும் படைக்கப்பட்டிருக்கும்.

காலம் இடம் என்ற பின்னணிகள் குறுநாவலில் இருப்பினும், காலத்தைச் சேர்ந்த இடத்திற்குச் சிறப்பு இருந்தாலும், அதைப் படிப்பவர் மனத்தில் தோன்ற வைக்கும் அளவிற்கு விரிவாகக் கூறப்பட்டிருக்காது. சிலசொற்கள், சிலதொடர்கள், சில காட்சிகளை அமைத்துப் பினனணி கூறப்பட்டிருக்கும். இடப் பின்னணி விளக்கப்பட்டிருப்பதால் காலம் பற்றிய குறிப்பு குறைந்து விடும். இடப்பின்னணி சுருங்குப்போது பாத்திர உரையாடலும் செயலும் மிகும். உவமை வழிப் பின்னணியைக் குறிப்பாக உணர்த்துவதுமுண்டு.

அனுபவத்தின் பரப்பு கதையாக விரிவது படைப்பாளி வாழும் இடத்தைப் பொறுத்தது; பரப்பை விரித்தெழுதாமல் உணர்த்துவதே குறுநாவலின் பண்பாகும். நாவலாசிரியன் தன் அனுபவப் பரப்பைப் பல நிலைகளில் தெளிவாகத் தெரியும் படி வெளிப்படையாக விரித்துக் கூறுவான். இந்த வெளிப் பாட்டைச் சுருக்கமாக அமைப்பதே குறுநாவலாசிரியனின் கடமையாகும்.'' என்று குறுநாவல்—நாவல் ஆகியவற்றிற்

கிடையேயுள்ள வேறுபாடுகளை விதந்தோதுகிறார் ஓர் ஆய்வாளர் [17]

## 9. சிறுகதை, புதினம் ஆகிய இரு பகுப்பிலும் கொள்ள வியலாத கூறுகளைக் கொண்டிலங்கும் கதையே குறுநாவல்

"சிறுகதை, புதினம் ஆகிய இரு பகுப்பிலும் கொள்ள வியலாத கூறுகளைக் கொண்டிலங்கும் கதைகளைக் குறும் புதினம் எனக் கொள்வதே பொருத்தமுடையது" என்பர். [18]

## 10. நாவல் அளவுக்கு நீளாத கதையே குறுநாவல்

"காவியத்தை மனதில் நினைந்து, வடிவம் உரையாய் இருக்கிற காரணத்தை மட்டுமே அவதானித்து 'வசன காவியம்' எனும் மகுடமிட்டு நாவலை இந்த நூற்றுண்டின் ஆரம்ப காலம் அழைத்ததைப் போல, நாவலை மனதில் கொண்டு கலை வடிவ வேற்றுமையை மனதில் தாங்கி நாவல் அளவுக்குப் பெருக இல்லாத காரணத்தால் இவைகள் குறுநாவல்களென அழைக்கப் பட்டிருக்கலாம்" என்பார் ஓர் ஆய்வறிஞர். [19]

## 11. நாவலின் ஒரு பிரிவு குறுநாவல்

"குறும்புதினங்களுக்கு இலக்கணம் இன்னதென்று கூறி வரையறுக்கவியலாது. பொதுவாக சிறுகதை இலக்கணங்களி லிருந்து சிறிது வேறுபட்டு அமையும். சிறுகதையை விடச்சற்று அதிகமான பக்கங்கள் குறும்புதினங்கள் ஏற்கலாம். இதழ்களின் தேவையாலும், படிப்போரின் ஆர்வச்சூழலாலும் புதிய படைப்பு நெறியாக இந்தக் குறுகிய காலத்தில் படித்து முடிக்கக் கூடிய குறும் புதினங்கள் தோன்றுகின்றன. புதினம் படிக்கப் பொறுமை யும் காலமும் இல்லாதவர்கள் இந்த இலக்கிய வகையை வரவேற் கின்றனர்.

புதினத்தின் குறுக்கமும் சிறுகதையின் நீட்சியும் குறும் புதினத்தை உருவாக்கியிருக்குமோ என்று அய்யம் எழுவது இயற்கையென்பர் ... பிரஞ்சு இலக்கியத்தில்தான் குறும்புதினம் ஒரு புனைகதை இலக்கியம் என்று கருதப்பட்டது. நீண்ட சிறு கதை குறும்புதினமாகாது; புதினத்திலிருந்து அளவால் சுருங்கிய குறும்புதினம், புதினத்தின் ஒரு பிரிவே; இப்புனைகதை வகை தனியானது; அனுபவத்தின் பரப்பைப் படைப்பாளி விரித்தெழு தாமல் உணர்த்துவதே குறும்புதினத்தின் பண்பாகும்" என்று கூறுவர். [20]

## 12. வரையறுக்க முடியாத ஓர் இலக்கிய வடிவம்—வகை குறுநாவல் :

" இன்று தமிழ்ப் புதின உலகில் வளர்ந்து வரும் ஒருவகையாகக் குறும்புதினங்கள் காட்சி அளிக்கின்றன. புதினத்தைப் பற்றிய வரையறை இன்னும் முழுமை பெறாத நிலையில், குறும்புதினங்களும் வரையறைக்குட் படாதனவாய், வரையறையற்ற நிலையிலேயே காணப்படுகின்றன எனினும் தமிழ் எழுத்தாளர்கள் குறும்புதினத்தைப் பற்றிய வரையறைகளைக் கூறி வருகின்றனர்.

தமிழில் குறும்புதினம் என்ற பிரிவைத் தொடங்கிய எழுத்தாளர் யார் என்பது புலனாகவில்லை. ஏறத்தாழ 1960 ஆம் நூற்றாண்டை ஒட்டி இவ்வகை ஏற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகின்றது. இவை கலைமகள், அமுதசுரபி போன்ற இதழ்களாலேயே வளர்க்கப்பட்டு வந்தன. இன்றும் இம்மாத இதழ்களோடு மங்கை, மங்கையர் மலர், மஞ்சரி, தீபம், தாமரை போன்ற இதழ்களும் குறும்புதினங்களை வளர்த்து வருகின்றன.

கி. ராஜேந்திரன் கல்கியின் கதைகளைப் பற்றிக் கூறுமிடத்தில் தீபாவளி மலர்களில் கல்கி அவர்கள் எழுதியவற்றைச் சிறுகதைகள் என்பதைவிடக் குறுநாவல்கள் என்பது பொருந்தும். ஒரு நீண்ட நாவலுக்குரிய சம்பவங்களைச் சுருக்கி நெடுங்கதையாக அவர் வழங்கியபோது விருவிருப்பு கூடி, படிக்க சுவாரஸ்யமாக இருந்தது. அதே நேரத்தில் கதாபாத்திரங்களின் குணச் சித்திரங்கள் மனத்தில் நிலையான இடம் பெற்றன ' என்று கூறுகின்றார்.

கல்கி அவற்றை எழுதிய காலத்தில் சிறுகதை, புதினம் என்னும் இரண்டு பிரிவுகளே இருந்தமையால் இவை சிறுகதை என்றே கூறப்பட்டு வந்தன குறும்புதினம் என்ற பிரிவு அக்காலத்தில் காணப்படாவிட்டாலும், குறும்புதின அமைப்பில் கல்கி கதைகள் எழுத அக்காலத்தில் முயற்சித்திருப்பதை இக்கதைகளினால் உணரலாம்.

உதயபானு, இளைய ராணி என்னும் தமது புதினங்களுக்கு எழுதிய முன்னுரையில் சாண்டில்யன், குறும்புதினங்களாக இருந்த அவற்றை விரிவாக்கி, புதினங்களாக எழுதியதாகக் கூறுகின்றார்,

இன்று மாத இதழ்களான மணியம், கதிர், மாலைமதி போன்றவற்றில் வரும் புதினங்கள் பல, அவற்றின் ஆசிரியர்களால் குறும்புதினங்கள் எனவும் கூறப்பட்டு முன்னரே வெளிவந்திருப்பதைக் காணலாம்.

எனவே குறும்புதினம் என்னும் ஓர் இலக்கிய வடிவம், தமிழ் எழுத்தாளரிடையே இன்னும் ஒரு தெளிவான வரையறைக்குள் கட்டுப்படவில்லை என்றே நினைக்கத் தோன்றுகிறது. எனினும் இருக்கும் குறும்புதினங்களைக் கொண்டு பின்வரும் முடிவுக்கு வரலாம். புதினத்தைவிடச் சற்றுக் குறைந்த அளவுடன் புதினத்திற்குப் போன்ற கதைக் கருவும் கொண்டு வருவன குறும்புதினம்என்னும் புதினத்தோடு தொடர்புப்பட்ட அளவு சிறுகதையோடு தொடர்புடையதாகத் தோன்றவில்லை என்பதை இதன் பெயரே சுட்டி நிற்கின்றது. நீள் சிறுகதை என்று பெயர் வைக்காமல் குறுநாவல் என்று பெயரிட்டிருப்பதால், அளவினால் மட்டுமன்றி, கதைக் கரு முதலியவற்றாலும் புதினத்துடன் தொடர்புடையதாகவே இதனைக் கருத வேண்டியிருக்கின்றது ” என்று விளக்குவர்.[21]

## 13. சமுதாயத்தில் குறிப்பிட்ட துறையினது பாதிப்பை விளக்குவது குறுநாவலின் நோக்கமாகும்.

“ சிறுகதைகள், நாவல்கள் தவிர குறுநாவல்கள் என்பதும் ஒரு தனிவகை இலக்கியமாக உருவாகி வருகிறது. சிறுகதை வாழ்க்கையின் ஒரு அம்சத்தை மட்டுமே வடித்துக் காட்ட எழுதப்பெறுகிறது. அதாவது குறிப்பிட்ட சம்பவத்தை, குறிப்பிட்ட கோணத்தில் காட்டுவதாக அமைகிறது. நாவல் வாழ்க்கையின் முழுத்தோற்றத்தையுமே, எல்லாக் கோணங்களில் இருந்தும் பார்க்க முயலுகிறது என்று கொள்ளலாம்.

குறுநாவல் இரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு இலக்கியமாகிறது. ஒரு சம்பவத்தை மட்டும் காட்டவில்லை. பாத்திரங்களின் முழுமையையும் காட்டவில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட துறை சமுதாயத்தில், வளரும் மனிதர்களை எப்படிப் பாதிக்கிறது என்பதை விளக்குவதே குறுநாவல்களின் நோக்கமாகும். வரதட்சணை, மலட்டுத்தன்மை, முன்கோபம், காதல் அல்லது கடமை போன்ற சில குறிப்பிட்ட குணங்கள் மனித வாழ்வைப் பாதிக்கின்ற முறைகளை மட்டுமே கருப்பொருளாகக் கொண்டு எழுந்தவை குறுநாவல்கள் ” என்பர்.[22]

**14. ஒரு கதையைப் பெரிதாக எழுதிவிடுவதால் மட்டுமே குறுநாவலாகிவிடாது :**

" பெரிதாக எழுதிவிடுவதனால் ஒரு கதை என்பது குறு நாவலோ ஒரு நாவலின் சுருக்கமோ ஆகிவிடாது என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன் " என்கிறார் த. ஜெயகாந்தன்.[23]

**15. குறைந்த பக்கங்களை உடையது குறுநாவல் :**

" குறைந்த பக்கங்களை உடையது குறுநாவல் ஆகும். நாவலிலிருந்தே இவ்வார்த்தை வருவிக்கப்பட்டது. நாவல்லா என்ற சொல்லை டெக்கமரான் எழுதிய பொக்காஷியாவோடு இணைத்துக் காணவேண்டும்.

... நாற்பதிலிருந்து நூறு பக்கங்களுக்குள் வெளியாகும் உரை நடையிலமைந்த கதைகளைச் சிறுகதை, நாவல் என்று பெயரிடாமல், குறுநாவல் என்றே கூறலாம். ஜெயகாந்தனின் ' யாருக்காக அழுதான் ', ' எனக்காக அழு ', ' ஆடும் நாற்காலிகள் ஆடுகின்றன ', ' சினிமாவுக்குப் போன சித்தாளு ' போன்றவைகளைக் குறுநாவல் என்பதில் தவறில்லை ...

## குறிப்புகள்

15. டாக்டர் கா. சிவதம்பி, நாவலும் வாழ்க்கையும், பக். 62-63.
16. த. ஜெயகாந்தன், ஒரு மனிதனும் சில எருமை மாடுகளும், பக். 2
17. பி. தட்சணாமூர்த்தி, நாவல் ஆய்வு, பக். 47-51.
18. டாக்டர் இராதாகிருஷ்ணன், சில புதினங்கள் சில பார்வைகள், ப. 14.
19. சண்முக. முருகானந்தம், ' யோகநாதனின் படைப் பிலக்கியம், கலாநிதி, ப. 28.
20. டாக்டர் வெ. கனகசுந்தரம், ஜெகசிற்பியனின் சமூகப் புதினங்கள், ப. 97
21. டாக்டர் வே. சீதாலட்சுமி, தமிழ்நாவல்கள் (அகரவரிசை) பக். xxxvi—xxx.
22. ' பதிப்புரை ', காந்தமலர்
23. த. ஜெயகாந்தன், ' முன்னுரை ' இன்னும் ஒரு பெண்ணின் கதை, ப. iii

(தொடரும்)

1. மனிதர் விரும்பும் மேன்மைக் குணங்கள் யாதினும் பெரிதும் அவர் நாடுவது ஞானமல்லவோ? அதனால் தானோ என்னவோ அதில் ஒரு போட்டியும் மறைவான ஒரு தற்பெருமை யும் ஏற்பட்டு விடுகிறது.

2. இன்பமும் வேதனையும், வாழ்க்கையின் அவலங் களிலும், அழுகைகளிலும், மகிழ்ச்சிகளிலும் கலந்தே வருகின்றன. இது, மேடையில் நடிக்கப்படும் இன்பியல், துன்பியல் நாடகங் களுக்கு மட்டுமல்ல, வாழ்க்கையெனும் பெரும் நாடகத்திற்கும் பொருத்தமானதே.

3. உடலினால் அனுபவிக்கும் உணர்ச்சிகளை மனிதர் களுக்கும் விலங்கினத்திற்கும் பிறப்பிலேயே இயற்கை அளித்து விடுகிறது. ஆனால் அவைகளால் பெறக்கூடிய படிப்பினை என்பது எளிதாகவோ சுலபமாகவோ வருவதில்லை; நீண்ட கால அனுபவத்தினாலும் கல்வியாலும் மட்டுமே வருவதாகும்.

4. உடல் நலம் உள்ளவர்கள் நோயாளிகளிலும் செல்வந்தர்கள் அல்லவா? ஏனெனில், நோயுற்றவர்களுக்கு உடைமைகள் எல்லாவற்றிலும் உடல் நலமே உயர்வானதாக ஆகிவிடுகிறது. உண்மையில் பாரசீகத்தின் மன்னரின் செல்வத்தை எல்லாம் பெற்றுக் கொண்டு நோயாளியாய் இருப்பதைவிட ஒன்றுமில்லாதவனாய் உடல் சுகத்தோடு இருப்பதை யார் தான் விரும்பமாட்டார்? இது பொருட் செல்வத்தைவிட உடல் நலத்தை மக்கள் உண்மையில் பெரி தாக மதிக்கின்றனர் என்பதை நிரூபிக்கின்றது அல்லவா?

5. பொதுவாக மனிதர்கள் அடையும் இன்பங்கள் என்பவை வண்ண அழகிலும் வடிவழகிலும் பெறப்படுகின்றன. மேலும் அவை பெரும்பாலும் வாசனைகளினாலும், இசையினாலும் உணரப்படுவது என்றாலும் உண்மையான இன்பமென்பது

துன்பம் கலவாதது, உள்ளத்தால் உணரப்படுவது; அதன் விளைவு இன்பமாகக் கனிவது.

6. எல்லாவித மனிதர்களின் வாழ்க்கையும், வாழ்வின் ஒவ்வொரு கட்டமும், எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கைகளாலும் கனவுகளாலும் நிரப்பப்பட்டுள்ளன. இந்த நம்பிக்கைகள் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் குடிகொள்ளும் லட்சியங்கள் ஆகும். ஒரு மனிதன் பொற்குவியல் ஒன்றையும் அதனால் வரும் இன்பங்களையும் தன் மனத்திரையில் காணக் கூடும். இன்னும் சொல்லப்போனால் அதில் வரும் உருவம் தன்னதாகவே பாவித்து வருங்கால அதிர்ஷ்டத்தை நினைத்து மகிழ்ச்சியும் அடையக்கூடும்.

*ஆதாரம் :*

**தி டயலாக்ஸ் ஆஃப் பிளாட்டோ என்ற நூல்.**

*தமிழாக்கம் :*

**கோ. ஆத்மநாதன், தஞ்சை.**

---

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

# திருவிடைமருதூர்க் கலம்பகம் ஓர் ஆய்வு

---

இரா. சுந்தரமூர்த்தி, எம்.ஏ.,எம்ஃபில்
முதுநிலை விரிவுரையாளர்,
த. உ. க. கலைக்கல்லூரி,
தஞ்சாவூர் - 2.

" குறைவி லாதவர் மருத நாயகர்
குவடு நாடிய கொண்டல்காள்
நறைகு லாமுலை விழியினீரது
நணுக வாடுமென் பெற்றியை
இறைவ னாரிட மொழிகு வீர்மயி
லினமு மராவு வந்துதாம்
சிறையெ லாம்விரித் திலய மாடுதல்
செகம தேழுமறிந்ததே "[8]

என்று தலைவி முகிலைத் தூது விடுப்பதாக இச்செய்யுள் அமைக்கப்பட்டுள்ளது. தலைமகளுக்கு இறைவனால் ஏற்பட்ட பிரிவு வருத்துகின்றது; இஃது இழவு பற்றிப் பிறந்த அவல மெய்ப்பாடாகும்.

## இளிவரல் மெய்ப்பாடு :

" மூப்பே பிணியே வருத்தம் மென்மை யோடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே "[9]

" அண்டர்பிரா னிடைமருதர் நம்புமெளி
யாண்மட்டி லன்பு நீத்தார்
ஐங்கணைக் கிழவனோ டவன்குடைத் திங்களும்
பொங்கொலிப் பேரிகைப் பொருதிரைப் புணரியும்
மங்களத் தேரென வயங்கிளந் தென்றலும்
இங்கெனைச் செய்திடு மிணையிலாக் கொடுமையைத்
துங்கமார் நெஞ்சமே! சொல்லவும் வேண்டுமோ? "[10]

என்று தலைமகள் கூறியது, பிணி பற்றிப் பிறந்த இளிவரல் மெய்ப்பாடு ஆகும்.

## மருட்கை மெய்ப்பாடு :

" புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே "[11]

என்ற நூற்பா நுவலும் நிலைக்களன்களில்

" ...... மருதூர்க்கட்
குடிப்பா லெனவே அதிகவிலை
கூறி விற்கு மிடைச் சியிர் நும்
மடிப்பான் மேலார் குடப்பாலுண்
மகிழ்வாய்த் தரினாம் வாங்குவமே " 12

எனவரும் திருவிடைமருதூர்க் கலம்பகப் பாடலில் பிறர் ஆக்கம் பற்றிப் பிறந்த மருட்கை அமைந்திருக்கின்றது. தலைமகன், தலைமகளின் (இடைச்சி) எழிலாக்கத்தைப் பாராட்டுகின்றான்.

## அச்சம் பற்றிய மெய்ப்பாடு :

" அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே " 13

என்ற நூற்பா அச்சம் பற்றிய மெய்ப்பாட்டை விளக்கும்; தென்றற்றூது எனுஞ் செய்யுளுறுப்பில்

" ஒளிருமிளந் தென்ற லேயென்
மையலறிந் தும்பணப்பை மெய்யிலணி
மருதரினும் வந்தா ரில்லை
ஐயமச்ச மகன்றுசமு கத்துநின்றி
யானுரும்பா டனைத்துங் கூறி
உய்யும்வித மவரைவரச் செய் " 14

என்று தலைமகள் கூறுவதாக அமைந்துள்ளது. சிவபெருமானாகிய தலைவர் பணப்பை (பாம்பு) யணிந்தவரென்பதனால் தென்றலுக்கு அச்சந்தோன்ற ஏதுவாக இருந்தது. " இறைவர் சிவபெருமான் பாம்பினை அணியாகப் பூண்டாரேயன்றிப் பிறர்க்கு அச்சம் தருவதற்காகப் பூணவில்லை. ஆகவே ஐயமச்ச மகன்று சிவபெருமானிடத்துச் செல்வாயாக!" எனத் தலைமகள் கூறுகின்றாள். இப்பாடல் தெய்வம் பற்றிப் பிறந்த மெய்ப் பாடாகும்.

## பெருமித மெய்ப்பாடு :

" கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே " 15

என்று பெருமித மெய்ப்பாட்டினைக் கூறும்;

தூது எனும் செய்யுளுறுப்பில்,

" நானங் கமழு முலைமட வாய்நெடு ஞாலமுண்ட
கோனங் களித்த குமாரன்கை யம்பொன் குடைமுரசம்
தானங் குறிக்கு மொருதேர் செயுந்துயர் தாங்ககிலேன்
வானங் களிக்கு மருதூ ரரைநீ வரச்செய்வையே "[16]

என்று தலைமகள், தலைமகனின் பெருமிதத்தைக் கூறுவதாக ஈற்றடியில் திருவிடை மருதூர்க் கலம்பக நூலாசிரியர் போற்றுகின்றார்; இறைவனுக்குரிய பெருமிதத்தைக் கூறும்போது 'வானங் களிக்கும் மருதூரர்' என்று கூறுகின்றார். இவ்வடியில் பெருமிதம் கொடையை நிலைக்களனாகக் கொண்டு விளைந்தது.

**வெகுளி மெய்ப்பாடு :**

" உறுப்பறை குடிகோ ளலைகொலை யென்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே "[17]

என்று தொல்காப்பியம் வெகுளி மெய்ப்பாட்டைக் கூறும்; மறம் என்னுஞ் செய்யுளுறுப்பில், மறவர்கள் தங்குடிப்பெருமையை,

" அச்ச மின்றி யெம்மனைக்க ணண்மி யீந்து திருமுகத்
தாண்மை பேசிப் பெண்கொ டென்று மரச தூத கேளடா
இச்சை மேவ மருத வாண ரிளைய பிள்ளை முருகவேட்
கின்ப மெய்து மெங்குலப்பெ ணேற்று மணமு முற்றதால்
அச்சு தன்வி ரிஞ்ச னாதி யமரர் பந்து வாயினார்
அறிந்தி ருந்து மொன்று சேர்தற் காசை கொள்ள
லாகுமோ
உச்சி தங்கொ டேவரன்றி வேறெவர்க்கும் பெண்கொடேம்
ஒன்றி நின்று கெஞ்சி டாம லோடிப் போத
னன்மையே "[18]

என்று கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளது; மறவர்களின் வெகுளியை இப்பாடல் உணர்த்துகின்றது; இது குடிகோளாகிய குடிப்பெருமை பற்றிப் பிறந்த மெய்ப்பாடாகும்.

**உவகை மெய்ப்பாடு :**

" செல்வம் புலனே உணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே "[19]

என்ற உவகை மெய்ப்பாட்டுக்கேற்பத் திருவிடைமருதூர்க் கலம்பகத்தில்,

" உலகம் புகழ்திரு வாள்வாட்
கயற்கண்ணி லொற்றிக் குழற்
றழைதரித் தம்மக் களபங் களபந்
தழைதழையென்
றிலகுரஞ் சேர்த்துக் களிப்புற்
றனளெம் மிறையவளே " 20

எனும் பாடல் புணர்ச்சியடிப்படையாகப் பிறந்த மெய்ப்பாட்டைக் கொண்டதாக விளங்குகின்றது; இப்பாடலில் தோழி தலைமகனிடம், "நீ கொண்டு வந்த தழையைத் தழைமகள் கண்ணில் ஒற்றிக்கொண்டு கூந்தலில் வைத்துக்கொண்டாள். சந்தனம் (களபம்) பூசிய யானை (களபம்) மத்தகமனைய முலையில் வைத்துக்கொண்டதனால் முலை தழைத்தது; களிப்புற்றாள் எம் தலைமகளே" என்று கூறினாள்; இது தலைமகளின் உவகையை வெளிப்படுத்திய மெய்ப்படாகும்;

## 2. அணிநயம் :

அணி என்பது அழகு எனும் பொருளையும் ஒப்பனை எனும் பொருளையும் குறிக்கும். இவ்வணியைப் பாடுவதில் பைந்தமிழ்ப் புலவர்கள் சிறந்திருந்தனர்; அணிநயமுறச் செய்யுள் யாப்பதில் வல்லவராய் விளங்கினர்.

" பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட் கிடனாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள் " 21

என்பது நன்னூல் நூற்பா; இத்தகு அணிநயமுடன் இயற்றப் பட்ட செயயுள்களைத் திருவிடைமருதூர்க் கலம்பகத்தில் சிறப்புறக் காணலாம். நூலாசிரியர், பொருளணி, சொல்லணி ஆகியவற்றை எழிலுறக் கூறியுள்ளார்.

### 1. உவமையணி :

" வினைபயன் மெய்யுரு வென்ற நான்கே
வகைபெற வந்த வுவமத் தோற்றம் " 22

என்று தொல்காப்பியர் உவமை வகைக்கு இலக்கணம் இயம்புகின்றார்

" பண்புந் தொழிலும் பயனுமென் (று) இவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்து " 23

என்று தண்டியாசிரியர் கூறுகின்றார். இந்நூற்பாக்களுக்கேற்பத் திருவிடைமருதூர்க் கலம்பகத்தில் இடம்பெற்ற உவமையணி களைக் காணலாம்.

அ. வினையுவமம் : கயலும் குழையும் :

எழிற் பெண்களின் கண்கள், உடம்பையும், உயிரையும் வருத்தும், உறவினை வளர்க்கும். கயல்போல் கண், குழை தடவி நிற்பதால் துன்பம் நீங்கும் என்பதை,

"எழிற் பெண்கள் மையுண் கண்கள்
ஊனாரு முடம்புயிரை வாட்டுமிக
வுறவுகொளாற் குற்று நோக்கும்
தானாருங் கயல்சாடுங் குழைதடவி
மீளுமிடர் தவிர்க்குந் தானே"[24]

என்று பாடுவதால் அறியமுடிகிறது.

தவமுனிவரும், நாரைகளும் :

தந்திரங்கள் கற்றுக் கண் மூடித்தவம் செய்யும் தவ முனிவரைப் போன்று மடைவாயில் நாரைகள் நிற்கும் என்பதைத்,

"தந்திரங் கற்றொளிர் கண்மூடி
மாமெய்த் தவத்தரென
முந்திரை நாடி மடைவாயிற்
காக்கு முதுக்குருகீர்"[25]

என்று இயம்புகின்றார்; தவத்தோர் முத்தியை நாடுவர். நாரைகளும் நாடி நின்றன என்று குறிப்பிட்டு நாரையின் வினைமேல் ஏற்றிக் கூறியுள்ளார்.

ஊசலும் பிறப்பும் :

பிறப்பு "ஊசல் நிகர் பிறப்பு"[26] என்று குறிப்பிடப் படுகிறது.

பாணனும் வீணையும் :

தலைவி, பாணனை,
"வினவுதற் கொவ்வா விடிகுரற் காட்டும்
வீணனாம் பாணனே கேண்மோ"[27]

என்றெள்ளி இகழ்கின்றாள் ; பாணனின் குரலை இடிபோன்ற குரல் என்று குறிப்பிடுகின்றாள் ; மேலும் அப்பாடலில் பாணனின் வீணையை,

"மதியிலான் செயுமோர் வாணிபம் போலும்
மகிழ்ந்திது கொண்டனை"

என்று எள்ளுகின்றாள்.

### இன்ப வாழ்வு :

திருமாலும் திருமகளும் இன்பம் பெறுவதைப்போலத் தலைமகள் தலைவனொடு பெறவேண்டுமென விரும்புகின்றாள்; பூவை விடுதூது எனுஞ் செய்யுளில், தலைமகள் பூவையிடம்,

"மலர்க்கண்ணன் திருவெனவே சுகம்பெறச்செய்
எந்நாளும் மறந்தி டோமே"[28]

என்று மொழிகின்றாள் ;

### அடிக்குறிப்புகள்

8. திரு. ம. கலம்., பா. 43
9. தொல்காப்பியர், தொல் மெய்ப்பாட்டியல் நூற்பா. 6.
10. திரு. ம. கலம்., ப. 11.
11. தொல்காப்பியர், தொல் மெய்ப்பாட்டியல் நூற்பா. 7.
12. திரு. ம. கலம்., பா 40
13. தொல்காப்பியர், தொல். மெய்ப்பாட்டியல் நூற்பா. 8.
14. திரு ம. கலம்., பா. 71.
15. தொல்காப்பியர், தொல் மெய்ப்பாட்டியல் நூற்பா. 9.
16. திரு ம. கலம்., பா. 70.
17. தொல்காப்பியர், தொல. மெய்ப்பாட்டியல் நூற்பா. 10.
18. திரு. ம. கலம்., பா. 49.
19. தொல்காப்பியர், தொல். மெய்ப்பாட்டியல் நூற்பா. 11.
20. திரு. ம. கலம்., பா. 35.
21. பவணந்தி முனிவர், நன்னூல் நூற்பா. 268.
22. தொல்காப்பியர், தொல். உவமவியல் நூற்பா. 268.
23. தண்டியலங்காரம் நூற்பா. 30.
24. திரு. ம. கலம்., பா. 44.
25. மேற்படி., பா. 45.
26. மேற்படி., பா. 48.
27. மேற்படி., பா. 78.
28. மேற்படி., பா. 94.

( தொடர்ச்சி அடுத்த இதழில் )

## வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு


## கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | |
|---|---|
| யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள் | ரூ. 50 00 |
| கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர் | ரூ. 30 00 |
| கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு) | ரூ. 6 00 |
| இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ் | ரூ. 6 00 |
| கபிலர்—நாவலர் ந. மு, வேங்கடசாமி நாட்டார் | ரூ. 4 00 |
| நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. 3 00 |
| மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர் | ரூ. 2 00 |
| கவியரசு நினைவு மலர் | ரூ. 1 00 |
| தமிழரசி குறவஞ்சி | ரூ. 0 75 |

### பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

| | |
|---|---|
| எழுத்ததிகாரம் | ரூ. 40 00 |
| சொல்லதிகாரம் | ரூ. 45 00 |
| கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்] | ரூ. 7 50 |
| கலைக் கூத்தன் கவிதைகள் | ரூ. 4 50 |

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TJ/24

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு ........................................................................ அவர்கள்

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

## தமிழ்ப் பொழில் கட்டணம்

| | | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 50 | 3 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 30 00 | 60 00 |
| வாழ் நாள் கட்டணம் | ரூ. | 250 00 | 600 00 |

வெளியிடுவோர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837 / 1, மேலராஜ வீதி,
தஞ்சாவூர் - 613 009.